REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER.

T. Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னுகம், கர ஆவணி நக 16-9-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 11

JAFFNA COLLEGE LIBRARY
17 SEP 1951
VADDUKODDAI, CEYLON.

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக் கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ கண்டி தொடக்கம் டில்லிவரை, குமரி தொடக்கம் இமயம்வரை தமிழ்ச் சங்கங்கள் இன்று தோன்றுவதைக் காணும்போது எந்தத் தமிழன்தான் பெருமையடையாதிருக்க முடியும்?

# அமுதனைய தமிழ்மொழியின் சக்தி

## கண்டி நாட்டிற் கன்னித் தமிழ் வளர்கின்றது

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழ் விழாவானது தமிழகத்தில் என்றும் அழியாப் பெரும் புகழை நாட்டி விட்டது. அதுடன் தமிழ் மக்களிடையே இத் தமிழ் விழாவானது தமிழ் ஆர்வத்தையும் உணர்ச்சியையும் உண்டாக்கித்

தேமதுரத் தமிழோசை
உலகமெலாம்
பரவும்வகை செய்தல்வேண்டும்

என்ற செந்தமிழ்ப் பணியிலும் தமிழன்பர்களை ஊக்கத்துடன் உழைப்பதற்குத் தூண்டியிருக்கின்றது. ஆகவேதான் தமிழ் விழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பின்னர் எத்தனையோ அன்பர்கள் இன்று தமிழ்த் தாயின் திருக்கோலப் பொலிவை மீண்டும் கண்டு மகிழுவதற்குக 'கனிவுறு நெஞ்சக மலர்'களுடன் அவள் சேவடியிற் கூடிச் சேவிப்பதைக் காண்கின்றோம்.

தமிழ் இலக்கியச் சரித்திரத்திலே ஒரு பெரும் மாற்றத்தை உண்டாக்கிய மாகவி பாரதியார் அவர்கள் தமிழ் மொழியானது சகல துறைகளிலும் மலர்ச்சிபெற்று விளங்குவதற்குப் பெரு வழிகளையும் காட்டியுள்ளார். இத்தனைக்கும் அவர் பெற்ற உள்ளொளியும் வாக்குவன்மையும் எழுத்து வேகமுமே காரணமாகும். வரண்டு கிடந்த தமிழகத்தில் இலக்கியப் பூங்காவை வளம்பெறச் செய்து அங்கெல்லாம் கவிதை ஊற்றுக்களைச் சாக்கச் செய்த வசந்தக்குயில் அல்லவா, எங்கள் வீரகவி பாரதியார்? ஆனந்த சுதந்திர வாழ்வுக்கு மக்களைச் செப்பனிட்டுத் தமிழ் அன்னையைக் கொலுவீற்றிருக்கச் செய்த பாரதியாரின் நினைவு பரந்து கிடக்கும் தமிழகத்திலுள்ள மக்களின் உள்ளங்களுக்கு இன்று புதிய சக்தியை ஊட்டி, அவர்களின் நாம்புகளுக்கு முறுக்கேற்றி வருகின்றதெனக் கூறுவதுமுழுவதுமுண்மையாகும்.

### பாரதி விழா

கண்டி தொடக்கம் டில்லிவரை, குமரி தொடக்கம் இமயம்வரை தமிழ்ச்சங்கங்கள் இன்று தோன்றுவதைக் காணும்போது எந்தத் தமிழன்தான் பெருமையடையாதிருக்க முடியும்? எனவே,

'சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச்
செய்வீர்.'

எனமுழங்கிக்கொண்டு கண்டிச் சீமையிலுள்ள மத்திய மாகாணத் தமிழ்ச்சங்கம் ஞாயிற்றுக்கிழமை (16-9-51) ஆரம்பமாவது மிகவும் மகிழ்ச்சி தரும் ஒரு செய்தியாகும். சங்க ஆரம்பவிழாவுக்கு முன்னதாகக் கண்டி நகரமண்டபத்தில் இச் சங்கத்தின் ஆதரவில் பாரதி விழா நடைபெறுவது தமிழ் மக்கள் செய்த தவப் பயனேயாகும்.

பாரதி விழாவைக் காலை ஒன்பதுமணிக்கு உதவிக்கல்வி மந்திரி திரு. கே. கனகரத்தினம் அவர்கள் திறந்து வைப்பார்கள். தமிழ் விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு அடிகோலிவைத்த திரு. கனகரத்தினம் அவர்கள் கண்டியிற் பாரதி விழாவை ஆரம்பித்து வைப்பது மிகவும் பொருத்தமானது.

'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்ற பணியை மேற்கொண்டு சென்னையிலிருந்துவரும் கலைமகள் இதழ் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் கண்டிக்கு விஜயம் செய்து பாரதி விழாவுக்குத் தலைமை தாங்குவதும் மகிழ்ச்சிக்குரிய தொன்றே. பழமையை ஓம்பிப் புதுமையையும் போற்றிவருபவர்களுள் வித்துவான் ஜகந்நாதய்யர் அவர்கள் மிக முக்கியமானவர்கள். இவர் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர் அவர்களின் உத்தம சீடருமாவார்கள். இப் பெரியாரின் தலைமையில் ஈழத்துத் தமிழறிஞர்கள்பலர் உலக மகா கவி பாரதியார் அவர்களைப்பற்றி விரிவுரைகள் ஆற்றுவார்கள்.

### தமிழ்ச் சங்கம்

மத்திய மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆரம்பவிழா ஞாயிறு பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகின்றது. சங்கத்தலைவர் [illegible] அவர்களின் [illegible] புரையின்பின்னர் சட்டநால் வல்லுநர் செனேட்டர் பெரி. சுந்தரம் அவர்கள் விழாவைத் திறந்துவைப்பார்கள். இலங்கைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் திரு. க. சு. அருணந்தி அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்குவார்கள். தமிழ் அறிவும் ஆங்கில அறிவும் நிரம்பப்பெற்றுக் கவிதை இயற்றும் ஆற்றலும் இயல்பாகவுள்ள இப் பெரியாரின் விரிவுரையைத் தமிழ் விழாவிற் கேட்டு அனுபவித்த தமிழ் மக்கள் கண்டியில் நடைபெறும் விழாவுக்குச் செல்வார்களாயின் அது நூதனமாகாது. இவ் விழாவிலும் செவிக்கினிய விரிவுரைகள் பல நிகழ்த்தப்பெறும்.

### எழுத்தாளர் மகாநாடு

இவ்வரிய சந்தர்ப்பத்தில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தையும் அங்குரார்ப்பணம் செய்ய ஏற்பாடாகியுள்ளது. இலங்கையிலுள்ள தமிழ் எழுத்தாளர்கள் ஒன்றுகூடி ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்வதற்கும் தங்கள் தொழிற்றுறையில் எழும் சிக்கல்களை ஆராய்ந்து வழிவகைகள் காண்பதற்கும் எழுத்தாளர் சங்கம் ஒன்று அத்தியாவசியமானதாகும். ஆகவே, திரு. கே. கணேஷ் அவர்கள் சங்கம் ஒன்றினை நிறுவுவது அவசியமெனக் கண்டுள்ளார்.

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]



எட்டயபுரத்திலுள்ள பாரதி மணிமண்டபத்திற் பாரதி விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினுர்கள். இலங்கை—இந்தியக் காங்கிரஸ் தலைவர் கே. இராஜலிங்கம் எம். பி. அவர்கள் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்தார்கள்.

# யாழ்ப்பாணத்துக்கு மதிப்பு

## கவின் மிக்க மனோஹரா

மனோஹரா படமாளிகையின் அமைப்பும், அதன் வேலைப்பாடுகளும் வசீகரமானவை என்று பரமேசுவரக் கல்லூரி அதிபர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் மனோகரமான இப் புதிய படமாளிகையைத் திறந்து வைத்துப் பேசும்போது குறிப்பிட்டார். இத் திறப்பு விழா சென்ற புதன்கிழமையன்று மிக மிகச் சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி—நாவலர் வீதிச் சந்திக் கருகாமையிற் கவர்ச்சிகரமான வேலைப்பாடுகளுடன் விளங்கும் இப் படமாளிகை மக்களின் அத்தியாவசியமான ஒரு தேவையைப் பூர்த்தி செய்திருக்கின்றதென்றே கூற வேண்டும். ஆரம்ப தினத்தன்று யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பிரமுகர்களும் பெண்மணிகளும் இரசிகர்களும் திரண்டு வந்தனர்.

திறப்பு விழா மாலை 6-30-க்கு ஆரம்பமாயிற்று. திரு. சு. நடேசபிள்ளை அவர்களை மனோஹரா கம்பனியின் அதிகார சபையினர் வரவேற்றனர். வழக்கறிஞர் திரு. எம். ஆர். காராளசிங்கம் அவர்கள் பேசும்போது மனோஹரா மாளிகையைத் திறந்து வைப்பதற்குத் தமிழ்ப் பண்பாடு மிக்க திரு. சு. நடேசபிள்ளை அவர்களே மிகவும் பொருத்தமானவர் என்பதைக் குறிப்பிட்டு, அன்னாரை அப் பணியை நிறைவேற்றி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தொடர்ந்து பேசும்போது தமிழ்க் கலை உணர்ச்சியை வளம்பெறச் செய்வதற்கு நாடக அரங்கங்களும் படக் காட்சிகளும் மிக்க உதவியாக இருப்பதைக் குறிப்பிட்டு, சகல சௌகரியங்களுடன் அதிக பணச் செலவிற் கவின்பெற நிறுவப்பெற்ற அப் படமாளிகை நிர்வாகிகளின் கலை ஆர்வத்தைப் பெரிதும்பாராட்டினுர்.

'பிச்சைக்காரி' யென்ற உணர்ச்சி மிக்க பேசும்படம் ஆரம்பமாவதற்கு முன்னர் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் அரங்கபூசை என்ற நடன கலா நிகழ்ச்சி ஏற்படுத்தப்பட்டிருந்தமை மிகவும் பொருத்தமாயிருந்தது.

மனோஹரா உன்னதமானதோர் படமாளிகையாகும். சௌகரியங்களுடன் சேர்ந்த ஒரு படமாளிகைக்கு வேண்டிய சகல வசதிகளும் இங்கு உள. திறப்புவிழாவின் போது ஒளி மயத்தில் விளங்கிய மனோஹரா யாழ்ப்பாணத்தில் என்றுமே பிரகாசத்துடன் திகழுமென்பதற்குச் சந்தேகமில்லை.

# அழியுங்கள்! எரியுங்கள்!!

## ஆலய நிர்வாகமும் அவல நிலையும்

நமது நிருபர் கடிதம்

யாழ்ப்பாணம், 14-9-51

எவ்வளவு புத்தகங்களைக் கரைத்துக் குடித்தாலென்ன? பல்கலைக் கழகங்களிற் பட்டம் பெற்றாலென்ன? இலக்கியக் கடலுள் மூழ்கி முத்துக் குவியல்களைக் கரை சேர்த்தாலென்ன? படித்த மனிதருக்கு ஆத்திரம் வந்தால் அவர்களுக்குப் புத்தி மட்டமாகிவிடுகின்றது.

இந்து ஆலய விசாரணைச் சபையினர் தமது அருமையான அறிக்கையை வெளியிட்டபோது அதனை அலசி ஆராய்ந்த பல சைவப் பெரியார்கள் அந்த அறிக்கை சைவ மத ஊழல்களை அகற்றுவதற்கு மார்க்கம் கண்டுள்ளதெனப் போற்றினர். ஒரு சிலர் அந்த அறிக்கையை அப்படியே நெருப்பிற் போட்டுச் சுவாகா பண்ணிவிட வேண்டுமெனத் தீர்மானங்கள் நிறைவேற்றினர். 'ஐயையோ! அந்த அறிக்கையில் தேவார திருவாசகங்கள் இருக்கின்றனவே, அவை தெய்வத் திருமொழிகள் அல்லவா?' என்று பள்ளிக்கூடமாணவர்கள் பேசுவதைக் கேட்டு அறிக்கையை ஓமகுண்டத்திற்போடும் அசலான யோசனையைக் கைவிட்டனர்.

சமீபத்தில் அகில இலங்கைச் சைவப்பெருமக்கள்கூடிக் கோயிற் சொத்துக்களைப் பாதுகாப்பதற்குச் சட்டம் அவசியமெனத் தீர்மானித்தனர். இது கோயிற் பணத்தை நம்பி வாழ்பவர்களுக்குப் 'பகீர்' என்றது. உடனே இவர்கள் கூடிச் சட்டம் வேண்டாம் என்று அலறிப்புடைத்தனர். அதுமட்டுமா? "தெய்வ சந்நிதிகளை அதன் பக்தர்களிடமிருந்து பறிமுதலாக்கி அரசாங்க உத்தியோகஸ்தர்களிடம் அல்லது அரசினர் நிர்வாகத்திடம் ஒப்படைப்பதை நாம் ஒருபோதும் ஆதரிக்கமுடியாது. அதைவிடக் கோயில்களை அழித்துவிடுவது மேல்" எனச் சைவசித்தாந்த சிகாமணி சு. சிவபாதசுந்தரம் அவர்கள் இப்போது கழறியுள்ளார்கள்.

அறிக்கையைச் சுட்டெரிப்பதும், ஆலயங்களைத் தரைமட்டமாக்குவதும் ஆத்திரக்காரரின் செய்கைகளன்றி

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

பனைவளர்ப்போம், அதைப்பாதுகாப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் வதந்தி

கொண்டோடி

- சைவக் கோயில்களை அரசாங்க ஊழியர்களின் கட்டுப்பாட்டில் வைப்பது பிழையாம்.
- அதற்குப் பதிலாக அவற்றை இடித்துவிட்டால் எவ்வளவோ நல்லதாம்.
- கோயில்களை இடித்துவிடுமாறு சொன்னவர் ஒரு சைவப் பெரியாராம்.
- பெரியவர்கள் வயது முதிர்ந்துவிட்டாற் சும்மா பேசுவார்களாம்.
- அவர்களின் பேச்சுக்களைப் பத்திரிகைகளும் சும்மா வெளியிடுகின்றனவாம்.
- 'சும்மா' வெளியிடுவதற்குச் சில பத்திரிகைகளுக்குப் பசை பூசவேண்டுமாம்.
- பசையடிப்பதிற் பத்திரிகைக்காரர்கள் புலிகளாம்.
- சைவர்களிலும் 'புலி' கள் இருக்கின்றனராம்.
- சில சைவப் புலிகள் கோயிற் பணத்தைப் பசியாறுவார்களாம்.
- இதைத் தடுக்கச் சட்டம் வேண்டுமாம்.
- பிறர் சொத்துச் சிவன் சொத்தாம்.
- சிவன்சொத்துக் கோயில்முதலாளிமாரின் சொத்தாம்.
- கற்பகதரு எங்கள் முதுசொமாம்.
- கள்ளிறக்குபவர்களுங் கற்பக தருவை வாழ்த்துகின்றனராம்.
- வாழ்த்தும் வசவும் வாழ்க்கையிற் சகசமாம்.

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

#### பதவியற்ற தராதரப்பத்திர ஆசிரியர்கள்

சமீபத்தில் வித்தியாபகுதியினர் ஒரு விளம்பரம் வெளியிட்டுள்ளனர். அதில் "தமிழ் அல்லது சிங்கள ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் i-ம் அல்லது ii-ம் பாகத்தில் சித்தியெய்தியோரில் 1600 பேரைத் தற்காலிக ஆசிரியர்களாக அரசினர் பாடசாலைகளுக்கு நியமிக்கத் தீர்மானம் உண்டு" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அன்றி, "அவர்களுக்கு வரும் 'இவ்வருடம்' முதற்கொண்டு பதவிகள் கொடுக்கப்படும்" என 7-9-51-ல் வெளியாகிய அரசினர் சமாச்சாரப் பத்திரிகைகளில் காணக் கிடக்கிறது. இதனால் உத்தியோகமற்றோர் குறைகளை நிவிர்த்தி செய்ய அரசினர் பெரிதும் முயற்சிப்பது கண்டு நாம் மகிழ்கின்றோம. ஆனால் ஒன்று!

ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சையில் பூரண சித்தியெய்தித் தராதரப் பத்திரமும் பெற்று வேலைக்காகக் காத்திருப்போர்தம் பதிவு இடாப்பில பதிந்துவிட்டு மூன்று நான்கு வருடங்களாகக் காத்திருப்போரது நிலைமை பெரிதும் கவலைக்கிடமானதாகவிருக்கின்றது.

ஒருபகுதியில் மாத்திரம் சித்தியெய்தித் தராதரப் பத்திரம பெறாத ஆசிரியர்கள பால கருணை பூணடு உதவியளிக்கவருமு அரசாட்சியினர் தராதரப் பத்திரம பெற்று வேலையற்றோர் பதிவு இடாபபில (Unemployed Teachers' List) பதிநது, வேலை வருமகாலததை எதிர்பார்ததிருககுமு ஆசிரியர்களுக்குமு இனன காலததில இப்படியான பதவி கிடைக்குமெனை ஒரு ஆறுதல் மொழியாவது கூற மாட்டார்களா? அவர்களுக்கு, தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களுக்குக் கிடைப்பதுபோலத் தற்காலிகப் பதவியாவது கிடைக்க மாட்டாதா?

வ. இ. செ. துரை
தெ்ப்பிட்டி, 10-9-51

#### சைவக்குருமார் யார்?

யாழ்ப்பாணத்துச் சைவ ஆலயங்களிற் பூசகர்களாக இருந்துவரும் பிராமண வகுப்பினர் சைவ சமயத்தவர்களது குருமார்களாகக் கொள்ளத் தக்கவர்களா? வைதீக ஸிமிர்திகளின் பிரமாணப்படி உபநயனம் பெற்றுக் காயத்திரி தியானத்தை ஆத்மார்த்த சாதனமாகக் கொண்டுள்ளோர் சைவ சமயிகளுக்குக் குருமார்களாக அமைய முடியாதென ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் கூறியிருப்பதினால் இவ் வகுப்பினர்களைச் சைவக்குருமார்களாக நாம்கொள்ளுதல முறையாகுமா? யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள கூறிய இலட்சணங்கள் பொருந்திய சைவக் குருமார் இருப்பின் அவர்கள் எவர் எனபதை அறிய விரும்புகின்றோம்.

ஒரு சைவன்
யாழ்ப்பாணம்,
8-9-51.

#### திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்

இச்சங்கத்தின் கூட்ட மொன்று சமீபததில் யாழ்ப்பாணம் நீதிபதி திரு. எஸ். தமபித்துரை அவர்களின் தலைமையிற்கூடியது. சங்கத்தலைவராக இருந்து கடமையாற்றிய திரு. என். வைத்திலிங்கம் பி. எஸ்ஸி. அவர்களின் பிரிவைக் குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. திருவாளர்கள் எஸ். சிவபாதசுந்தரம் எம். ஏ. அவர்களும், நியாயவாதி எம். பாலசுந்தரம அவர்களும், ஆசிரியர் கே. தம்பையா அவர்களும் அன்னாரின குணநலங்களைப் பாராட்டிப் பேசினர்.

~~ காங்கேசன்துறையில் ~~

திறமான பல ரக சீமேந்து, மலையாளம் கொழுககி ஓடுகள், செங்கல், பயர்ஸ்ரோன் ரயர், ரீப்புகள மற்றும் பலசாய்ப்புச் சாமான் களும் விலை சகாயமாய்க் கிடைக்குமிடம்:—

நியூகோ ட்றேடிங் கம்பனி

காங்கேசன்துறை

தந்தி விலாசம்: " நியூகோ " :: டெலிபோன்: நம்பர் 25

[4390]

சகல பயிர்களுக்கு

C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில் 40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The Colombo Commercial Company, LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: [illegible] தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல: 5351.

[43[illegible]]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மலையும் மலையருவியும், நாடும் நாட்டுத் தீயும், வயலும் வயற்சேறும், கடலும் கடற்கரையும் கவிஞனேடு அந்தரங்கமாகப் பேசாமல் பேசுகின்றன.

# உலகம் பேசுகிறது

பேசுகிற பேச்சைவிடப் பேசாத பேச்சிற் சுவை உண்டு; நயம் உண்டு; ஆற்றல் உண்டு; அதிகமான பயனுமுண்டு. இவற்றையெல்லாம் ஆசிரியர் ஜகந்நாதன் அவர்கள் **பேசாத பேச்சு*** என்ற தமது கட்டுரைத் தொகுதி மூலம் விளக்குகின்றர். 'உலகம் பேசுகிறது' என்ற கட்டுரையின் ஒரு பகுதியை இங்கு அனுவதித்துள்ளோம். ப. ர்.

**கி. வா. ஜகந்நாதன்**
**ஆசிரியர், 'கலைமகள்'**

**பேசுகிற பேச்சைக்** கேட்டுத் தெரிந்து கொள்வதில் நாம் ஓரளவு வல்லவர்களாக இருக்கிறோம் என்பது நம் எண்ணம். வெள்ளைப் பேச்சாக இருந்தால் தெரிந்து கொள்ளலாம். அப்படி யில்லாமல் ஆழ்ந்த கருத்துடைய பேச்சாக, அலங்காரமுள்ள பேச்சாக, அறிவுள்ள பேச்சாக, இருந்தால் ஓடுகிற ஓட்டத்திலே கேட்டுப் புரிந்து கொள்ள முடியாது. ஓட்டத்தைத் தணித்துக் கொண்டு கவனித்தால் அத்தகைய பேச்சின் பொருள் உள்ளத்தில் ஊறத் தொடங்கும். பேச்சின் ஆழம் அதிகமாக ஆகக் கேட்பவனுடைய பொறுமையும் ஒருமைப்பாடும் அதிகமாக இருந்தால்தான் பொருளுணர்ந்து இன்புறலாம்.

ரசிகத் தன்மை மிக்கவர்களுக்குப் பேசுபவர்களுடைய குறிப்பு எளிதிலே விளங்கும். அத்தகைய கூட்டத்தில் புலவர்கள் பேசவேண்டுமென்று விரும்புவார்கள்.

பேசுகின்ற பேச்சின் சுவையை அறிவதற்கே அறிவு வளமும் ரசிகத் தன்மையும் வேண்டுமானல், பேசாத பேச்சின் உயர்வை உணர அறிவுப் பக்குவம் மிகுதியாக வேண்டும். சிறந்த ரசிகர்களாகிய கவிஞர்களும், அறிவு வளம்பெற்ற தத்துவ தரிசிகளும் பேசாத பேச்சை உணரும் வன்மை படைத்திருக்கிறார்கள். உலகம் முழுவதுமே அவர்களுடன் பேசாமல் பேசுகிறது. "மரத்தில் உள்ள ஒவ்வோர் இலையும் ஆண்டவன் புகழைச் சொல்லுகின்றது" என்று ஒரு மெய்ஞ்ஞானி இயம்புகிறார்.

மலையும் மலையருவியும், காடும் காட்டுத் தீயும், வயலும் வயற்சேறும், கடலும் கடற்கரையும் கவிஞனேடு அந்தரங்கமாகப் பேசாமல் பேசுகின்றன. அவனுடன் பேசாத பொருளே இல்லை. ஒரு புலவர் பலாமரத்தைப் பார்த்தார்; மாமரத்தைக் கண்டார்; பாதிரி மரத்தைக் கண்ணுற்றார். பலாமரம் தளிர்த்து இலைவிட்டது; திடீரென்று கொத்துக்கொத்தாகப் பிஞ்சுகளை விட்டது. கவிஞர் இந்தக் காட்சிகளைக் கண்டார். மாமரம் தளிரீன்று இலை முதிர்ந்து அரும்பு முகிழ்த்தது. பூத்துக் குலுங்கியது. பின் காய்த்தது. இந்த நிகழ்ச்சிகளையும் கவிஞர் கண்டார். வேனிற் காலத்தில் தழைத்து வளர்ந்த பாதிரி மரம் கிளை முழுவதும் பூவாகச் சொரிந்தது. பிறகு அந்த மலர்களெல்லாம் உதிர்ந்தன. காய் என்ற ஒன்று வரவில்லை. பாதிரி மரத்தின் மலர்ச்சியும் கவிஞர் கருத்தில் பதிந்தது.

மலராமல் காய்த்த பலாவும், மலர்ந்து காய்த்த மாவும், மலர்ந்தும் காயாமல் நின்றுவிட்ட பாதிரியும் கவிஞருடன் பேசின. "உலகத்திலே எங்கள் ஜாதி மக்களும் இருக்கிறார்கள்" என்றுதான் பேசியிருக்க வேண்டும். அந்தப் பேசாத பேச்சைக் கேளாமல் கேட்ட கவிஞர் உலகத்தாரிடம் பேசுகிற பேச்சினுல் அவை வெளியிட்ட உண்மைகளைச் சொல்ல எண்ணினர். கவிஞராதலின் கவியாக வந்தது. "மூன்றும் பேருக்குத தெரியாமல செய்ய வேண்டிய காரியத்தை மௌனமாகச் செய்து விளம்பரமேயின்றி வாழும் உத்தமர்கள் எப்படி இருப்பார்கள்?" என்று நாம் கேளாமலே கவிஞர், "பலாமரத்தைப்போல இருப்பார்கள்" என்று சொல்கிறார். மாமரத்தின் ரகசியப் பேச்சைக் கேட்டது நினைவுக்கு வருகிறது. "சில பேருக்குச் செய்யப்போகிற காரியத்தைச் சொல்லிக்கொள்வதில் ஒரு திருப்தி. அவர்கள் சொன்னபடியே செய்கிறார்கள். இவர்களை உத்தமர்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும் அதமர்களல்ல. பலாமரச்சாதியைவிடச் சிறியவர்கள், மாமரச் சாதி" என்று சொல்லுகிறார். அடுத்தபடி பாதிரி மலர் நகையால் மயக்கிச் சிரித்துப் பேசிய பேச்சையும் அவர் உணர்த்துகிறார். "வீண் ஆடம்பரமும் விளம்பரமும் செய்து, இது செய்வேன், அது செய்வேனென்று வாய்ப் பந்தல் போட்டுக் கடைசியில் ஒன்றும் செய்யாத கீழ் மக்கள் பாதிரி மரத்துக்கு அண்ணன் தம்பிகள்" என்று பாடுகிறார்.

சொல்லாம லேபெரியர்
 சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியும் செய்யார்
 கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணய்
 கூறுவமை நாடின்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

'வளைந்த மாலையை அணிந்த வேல்போன்ற கூர்மையான கண்ணைப் படைத்த பெண்ணே, இந்த மூன்று மரங்களையும் பார்' என்று கவிஞர் ஒரு பெண்ணை வியாஜமாக வைத்துக் கொண்டு உலகத்துக்கே உபதேசம் செய்கிறார். கூரிய கண்ணைப் படைத்தவளாகையால் நன்றாகப் பார்க்க முடியும் என்ற கருத்தோடு அவளை விளிக்கிறார். புறக்கண்ணேடு அகக்கண்ணையும் கலந்து பார்த்தவர் கவிஞர். ஆகவே அவரிடம் மரங்கள் பேசுகின்றன.

*பேசாத பேச்சு: ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; பிரசுரம்: அமுத நிலையம் லிமிடெட்; சென்னை 18; விலை: ரூபா 2.8.0.

# செல்வச் சந்நிதிவாழ் தயாநிதி

**அல்வாயூர், மு. செல்லையா**

**விநாயக வணக்கம்**

வெண்பா

பெருகுந் திருவருள்போற் பேராநீர்க் கேணி
அருகமரு மானைமுகத் தையன்—மருமலர்த்தாள்
சிந்தை பணிந்துசெல்வச் சந்நிதிவாழ் சேய்மீது
நிந்தாஸ் துதியுரைக்க நேர்.

**நிந்தாஸ்துதி**

பொன்னமருந்தொண்டைமானுற்றிற்பொலிந்தசெல்வச்
சந்நிதியில் மேவுந் தயாநிதியே—நின்னப்பன்
எப்பொழுதும் நட்டமுற எம்மவர்க்கி லாபம்நீ
தப்பாது செய்குவையோ தான். 1

தரையார் விரும்புநன்னீர் தானமையா ஆற்றங்
கரையானென் றுன்னைக் கழற—வரையாது
வேட்டவர மீகின்றாய் வேலவனே சாதிநெறி
நாட்டமுனக் கின்றோ நவில். 2

நங்கையர்க்கு நான்குவிழி நாதனுக்கீ ராறுவிழி
தங்குமயிற் காயிரங்கண் தானமைந்தும்—எங்குறைகள்
கண்டொழிக்க வன்மையிலாக் கந்தாநின் சந்நிதிசேர்
தொண்டருக்கி யாதோ சுகம். 3

வாழும் பதிசெல்வச் சந்நிதியாய் மன்னுமன்பர்
ஆளும் பெயர்செட்டி என்றமைந்தும்—நாளுமனை
வாழ்த்து மடியார் வறுமையுறக் காரணமென்
*குழ்த்தமங்கை மார்தடையோ சொல்.

சட்டியிலே கொக்கவித்துச் சாருக்கி நீதரலால்
பெட்டியிலே அன்னம் பெருகினதென்—றிட்டமுடன்
சிந்தைகளித் தார்வறியார் சேர்ந்துபுசித் தாரடியார்
முந்துங் துலாமதியில் முன். 5

அஞ்சுதலை நானுடையேன் ஆறுதலை நீயளித்தால்
விஞ்சுதலைப் பாரமெனை மேவாதோ—துஞ்சுதலை
விட்டழிகள் மூசுமலர் மேவுசெல்வச் சந்நிதியில்
இட்டசித்தி ஈஎந்தை யே. 6

செட்டியெனும் பேருடைநீ செல்வர்களே உன்பாதங்
கிட்டி யுரைப்பவற்றைக் கேட்பதன்றி—எட்டிநின்றே
ஏழை உரைப்பதனை ஏற்காயென றெண்ணமல்
நாளைவீ ணக்கினனே நான். 7

அக்கினியி லேயுருவாம் ஆனவுன்றன் மேனியிலே
இக்குநிக ரான்பால் இறைத்தாலும்—மிக்கஅனல்
ஆறிநெஞ்சு நீகுளிராய ஆனதினல் எந்துயரம்
மாறமனம் கொள்ளாய் மதி. 8

வன்மைமிகு சூர்முதலை வாட்டியநீ கானகம்வாழ்
மென்மைமிகுவள்ளிக்குத்தோற்றதுமேன்-உன்னிடத்தில்
நம்பிக்கை கொள்ளவொரு ஞாயமுண்டோ சந்நிதிவாழ்
தும்பிக்கை யான்தம்பி சொல. 9

நஞ்சுண்ட ஈசனருள் நாதனே என்முகத்தில்
அஞ்சுண்டு நின்முகத்தி லாறுண்டு—பஞ்சுண்டு
தேவியர்கள் பாதத்தில் தேவேநீ நோவறியாய்
பாவியைப்பார்ப் பாயோ பகர். 10

வள்ளிதெய்வி மாதர் இருவோரை நீமணந்தும்
பிள்ளையொன்றும பெற்றிலையென் றெண்ணமல்—உள்ளு
[ருங்
மைந்தர்வரம்கேட்டால்வழங்குவையோதொண்டையுறை
கந்தனே சொல்லுண்மை காண். 11

பன்னிருகைச் செல்வன்நீ பாழும் பிணிவருத்தும்
என்னெருகைத் துன்பத்தை யெண்ணயேல—சந்நிதிவாழ்
கந்தா அபய வரதக் கரமுடைய
மைந்தா எனல்வீண் மதி. 12

ஓங்குங் கடைமகனய் உன்தந்தைக் கோதுவித்து
வீங்குசிறை நான்முகனை நீவிடுத்த—தீங்கையெண்ணி
பெண்தருவா ரின்றியோ பேசும்பா யானையொடு
மண்தருமா னைமணந்தாய் மன். 13

* சூழ்ந்த என்பதின் விகாரம்

**ஐரோப்பா யாத்திரை**

★ கல்லினல் செய்யப்பெற்ற சிங்கம் பிரான்சு தேசத்தைப் பார்த்தவண்ணம் நிற்கின்றது.

# பூங்காவும் சிங்கமும்

2–9–51-ன் தொடர்ச்சி

✕✕✕✕✕✕✕✕✕✕✕✕✕
**வழக்கறிஞர்**
**அ. அருளம்பலம்**
✕✕✕✕✕✕✕✕✕✕✕✕✕

**பெல்ஜியத்தின்** பண நிறைவுக்குக் காரணமாக ஆபிரிக்காவில் "தி பெல்ஜியன் கொங்கோ" என்று அழைக்கப்படும் ஒரு குடியேற்ற நாடு உண்டு. இது பெல்ஜியத்திலும் பார்க்க எண்பது மடங்கு பெரியது. இந்தப் பூங்காவில் இக்குடியேற்றநாட்டிற்கு ஒரு ஞாபகச்சின்னம் நிறுவப்பெற்றிருக்கின்றது. ஒன்றல்லப் பல சின்னங்கள் நிறுவலாம். ஏனெனில் குடியேற்ற நாட்டின் செல்வம் அங்கு சேர்வதால. இலங்கை குடியேற்ற நாடாக இருந்து குடியரசானது எவ்வளவு பெருமை. நாம் புறச்சுதந்திரம் பெற்றது மட்டும் போதாது; அகச் சுதந்திரமும் பெறவேண்டும். தக்க உணவும் உடையும் உறைவிடமும் எல்லாரும் நிரம்பப் பெறவேண்டும். சாதித் துவேஷம் ஒழியவேண்டும். நமது நாட்டு மக்கள் எல்லாம் நாட்டு மன்னர்கள் ஆகவேண்டும். யாருக்குள்ளே நமது நாடு நல்ல நாடாகவேண்டும்.

"ஞானத்திலே பரமோனத்திலே
 —உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுத [illegible]
கவிதையிலே" உயர் [illegible]
வேண்டும்.

பூங்காவில் இருந்து திரும்பி விடுதிக்கு வந்து மத்தியானப் போசனம் முடித்துக்கொண்டு மீண்டும் சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பித்தோம். பிறஸ்செல்ஸ் இல் இருந்து சுமார் முப்பது கல் தூரத்தில் உவாட்டர்லூ (Waterloo) என்ற இடம் இருக்கின்றது. வழியில் பல இடங்களையும் பார்த்துக் கொண்டு இந்த இடத்திற்குச் சென்றோம். இங்கேதான் 1815-ம் ஆண்டு வெலிங்ரன நெப்போலியனை யுத்தத்தில் வென்றது. இந்த யுத்தம் நடந்த இடத்திற்கு அருகாமையில் ஒரு உயர்ந்த மலைபோன்ற மண்குவியல் ஒன்று இருக்கின்றது. இதன் சிகரத்தில ஒரு கல்லினுல் செய்யப்பெற்ற சிங்கம் பிரான்சு தேசத்தைப் பார்த்தவண்ணம் நிற்கின்றது. இந்த யுத்தத்தில் ஆங்கிலேயரும், ஒல்லாந்தரும், ஜெர்மனியரும், ருஷியரும், பெல்சியத்தவரும் பிரான்சின் ஒப்பற்ற போர்வீரனுகிய நெப்போலியனுடன் சமர் புரிந்து வென்றார்கள். இந்த [illegible] த்தின காட்சியை [illegible] பிரசித்திபெற்ற ஒரு சித்திரகாரன் அழகாக வர்ணம் தீட்டி இருக்கின்றார். இந்தப் படத்தை வட்ட வடிவமான ஒரு தனி மண்டபத்தில் வைத்துக் காண்பிக்கின்றார்கள். மண்டபத்தின் நடுவில் நின்று பார்க்கும்போது யுத்தம் முழுவதும் கண்முன்னல் வெகு நுணுக்கமாக விஸ்தரிக்கப்படுகின்றது. என்னே உயரிய சித்திரத்தின் மாண்பு! இந்தப் பழைய யுத்த களத்தில் இருந்து மீண்டு மறுபடியும் வாடி வீடு சேர்ந்தேன்.

பெல்ஜியத்திலும் ஒரு நாள் நல்ல சோறு கறி கிடைத்தது. அங்கே உள்ள இந்தியப் பிரதமப் பிரதிநிதியின் காரியாலயத்தில் உதவிக் காரியதரிசியாகக் கடமையாற்றும் திரு. இராமச்சந்திரன் அவர்கள் நான் கொழும்பில் இருந்து லண்டனுக்குப் பிரயாணம் செய்தபோது கப்பலில் பழகிச் சிநேகிதமானர். அப்போதே நான் பெல்ஜியத்திற்குப் போகும் காலத்தில் தன்னுடைய விருந்தினராக வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இப்படியான சந்தர்ப்பத்தை யார்தான் மறுப்பார்? ஆகவே நான் பெல்ஜியம் சேர்ந்ததும் திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு டெலிபோன் மூலம் அறிவித்து நாம் சந்திக்கவேண்டிய நாளைக் குறித்துக்கொண்டோம். என்னுடைய வரவை எதிர்பார்த்து திரு. இராமச்சந்திரன் தம்பதிகள் அறுசுவையுடன் அமுது தந்தார்கள். திரு. இராமச்சந்திரனு

[தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழகேசரி

சுன்னாகம், கரஹு ஆவணி ௩௧
— காந்தி ஆண்டு 82 —
பேசுந் தந்தி இல. 805

## புதிய தொழிற்சாலைகள்

சுதந்திரத்தைப் புதிதாகப் பெற்ற நமது இலங்கைத் தேசம் உயர்நிலையை அடைந்து செல்வம் நிறைந்த நாடாகவேண்டின் அது தொழில் அபிவிருத்தியாற்றான் ஆகவேண்டும். இதை இலங்கை மக்களும் அரசினரும் அறியாதிருக்கவில்லை. தொழில் அபிவிருத்தியை நாடி அரசினர் காட்டும் விசேஷ அக்கறையும் அதன்பொருட்டுச் செலவிடும் பணமும் இம்மாத்திரமன்று. விஷயமிவ்வாறாயினும் அதற்கேற்ப நற்பயன் ஏற்படாதிருப்பது மிக்க யோசனையை உண்டாக்குகின்றது. புதிய புதிய பல தொழிற்சாலைகள் ஒருபுறம் அமைத்துச்செல்ல, முன்னர் ஏற்படுத்திய அதிக இலாபத்தையும்விருத்தியையும் கொண்டுவந்த வேறுசில தொழிற்சாலைகள் பெரு நட்டத்தைக் கொண்டுவந்தமையால் மூடப்படவேண்டியனவாகின்றன.

எத்தனையோ மூலப்பொருள்கள் போதியளவுள்ள இலங்கையிற் பல்வேறு தொழிற்சாலைகளை மிக்க திறமையாகவும் இலாபத்துடனும் நடாத்த இடமுண்டு. அப்படியிருந்தும் பெருநட்டமேற்பட்டுத் தொழிற்சாலைகள் மூடப்படவேண்டிவருவது காலக் கொடுமைபோலும். ஏற்ற முறையிலே தொழிற்சாலைகள் அமைக்கப்பெற்று நடத்தப்படாமையாற்றான் இவ்வித கதி தொழிற்சாலைகட்கு ஏற்படுகின்றது. இலங்கையில் ஏற்படும் தொழிற்சாலைகள் யாவும் பெரும்பான்மையும் அரசினரால் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படுகின்றன. மூலதனம் முழுவதும் அரசினருடையதே. ஆனால் இந்திய அரசினர் தொழில்விருத்தியில் கையாளும்முறை வேறுவிதமானது. தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்பொழுது பொதுமக்களையும் அதில் சேர்த்துக்கொள்கின்றனர். உதாரணமாக மைசூர் சமஸ்தானத்தில் அமைக்கப்படும் தொழிற்சாலைகளில் அரசினர்க்கு நூற்றுக்கு 51 பங்கு தானுண்டு. மிகுதி 49 பங்கும் பொதுமக்கட்கே யுரியது. ஆகவே, தொழிற்சாலைபரிபாலனம் அரசினராலும் பொதுமக்களாலும் நிர்வகிக்கப்படுவது நோக்கப்படவேண்டும்.

தொழிற்சாலைக்குப் பெரும் பணம் மூலதனமாக வழங்கியபோது மக்கள் அதன் பரிபாலனத்தில் மிகுந்த அக்கறைகாட்டி நிற்பர். நிர்வாக ஊழல்கள் ஏற்படவும் இடங்கொடார். ஆனால் முற்றாக அரசினரால் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளைப் பொதுமக்கள்கொள்ளையடிக்கவே முயன்றுநிற்பர். அரசினர்க்கு நட்டம் வருவது தமக்கே ஈற்றில் தீமை எனபதை உணர்வதில்லை. ஆகையால இலங்கை அரசினர் தொழிற்சாலைகள் அமைக்கும் விஷயத்தில் புதிய முறைகளை நிச்சயமாகக் கையாளவேண்டும். தனவந்தர்களாயுள்ள பொதுமக்களையும் தம்முடன் சேர்த்துக்கொண்டாற்றான் பெருந் தொகைப் பணத்தை மூலதனமாகக்கொண்ட இந்தத் தொழிற்சாலைகள் பெரு நன்மையுடன் நட்டமின்றி விருத்தியடைய இடமுண்டு.

இப்போது எத்தனையோ புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. கல்லோயாவில் அநேக தொழிற்சாலைகளுக்குத் திட்டங்கள் ஆயத்தமாயுள்ளன. பிரதானமாகக் கொழுக்கி ஓடுகள், சீனி என்பன விரைவில் அங்கு செய்யப்படுமாம். அத்துடன் மட்டக்களப்பினை யடுத்த வாழைச்சேனையிற் கடதாசித் தொழிற்சாலை ஏற்படுத்த எத்தனங்கள் கையாளப்படுகின்றன. ஆனையிறவில் காரச் சோடா, 'குளோறைன்', டி. டி. ரி. என்பன செய்ய முயற்சிகள் கையாளப்படுகின்றன. இவைகளெல்லாம் நாட்டின் செல்வ விருத்திக்கு அத்தியாவசியமாக உள்ளனவே. ஆனால் இத் தொழிற்சாலைகளிற் பொதுமக்களும் பங்கெடுத்துக் கொண்டாற்றான் அவைகள் தளப்படியின்றி நட்டம் வராமல் பெரு நன்மையுடன் நடத்தப்படலாம். அன்றேல், அரசினரால் நடத்தப்பட்டுப் பின்னர் நட்டங் காரணமாக மூடப்பட்ட கண்ணாடித்தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலை, பெட்டிகள் செய்யும் தொழிற்சாலை, என்பன வடைந்த பரிதாப கதிகளையே இவைகளும் அடையும். ஆகவே தொழிற்சாலை நிர்வாகத்தில் பொதுமக்கட்கும் போதிய பங்கு அவசியம் என்பது தெளிவாகின்றது. இதை இலக்காகக் கொண்டே தொழிற்சாலைகள் நிலைபெற அரசினர் திட்டங்கள் வகுக்கவேண்டும்.

## இந்தியத் துவேஷமா?

பூரண சுதந்திரம் பெற்றுள்ள தாய்நாடாகும் இந்தியா மீது இலங்கை காட்டிவரும துவேஷம்இம்மட்டன்று. சிறிய நாடாகும் இலங்கையை இந்தியா விழுங்கப்போகின்றதென்ற அச்சமும் சந்தேகமுமே இந்தக் கோலத்துக்குக் காரணம். இந்தியர்களை நாடு கடத்தக் கைக்கொண்ட எத்தனங்கள் எத்தனை? இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அதிக பணம் போவதாகக் கூறி ஏற்படுத்திய தடைகள் எத்தனை? மிக்க நெருங்கிய தொடர்பையுடைய இவ்விரு நாட்டினையும் இயற்கைக்கு மாறாகப் பிரித்து வைப்பது எப்படி இயலும்? இலங்கை யரசினர் இந்தியா மீது கொண்ட ஆத்திரத்தாற் பாகிஸ்தானைக்கூடக் கட்டித் தழுவி நட்புப் பூண்டனர். இந்த ஆட்டங்கட்கு இந்திய அரசினர் அஞ்சினரல்லர், பொருட்படுத்தினரல்லர். சென்ற மூன்று வருடங்களாக இவ்விருநாடுகட்கிடையில் இருந்துவந்த போக்கு வரத்துக் கொடுக்கல் வாங்கல் என்பன பெரிதும் தடைப்பட்டன. இலங்கையிலிருந்து இந்தியாவுக்குப் பணம் அனுப்புவதாயிருந்தால் பிராணசங்கடமாக விருந்தது. இப்போது இலங்கையரசினர் தாம் மேற்கொண்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்த முற்பட்டுள்ளனர்; நல்லறிவும் வரப்பெற்றனர். இப்போது இந்தியாவுக்கு யாவரும் 250 ரூபாய் பிரதி மாதமும் அனுப்பலாமென முடிவுசெய்துவிட்டனர். இனியாவது இலங்கையரசினர் உண்மை நிலையை உணர்ந்து இருநாடுகட்குமிடையிற் புராதன காலந் தொட்டு இருந்துவந்த இறுகிய .... தொடர்பினையும் நிலைபெறச் செய்வாராக.

## பாதை ஓரத்தில்

### பாட்டைசாரி

பொதுத் தேர்தல் எந்த நேரமும் ஏற்படக்கூடுமென மந்திரி கொத்தலாவல தெரிவிக்கின்றார். அதற்காக நாட்டிலுள்ளவர்களின் 'கார்'களைத் தேர்தல் காலத்தில் யூ. என். பி. யின் தேவைகளுக்குத் தருமாறு அவர் அவசரக் கடிதங்கள் பறக்கவிட்டிருக்கின்றார். 'உமது எதிர்காலம் ஆபத்தில் இருக்கின்றதென்பது' மந்திரியின் கூற்று. யூ. என். பி. பொதுத் தேர்தலில் மண் கவ்வினால் நாட்டுக்கு ஆபத்தோ, அன்றேல் தேர்தலுக்குக் 'கார்' கொடாது விட்டாற் 'கார்' வைத்திருக்குஞ் சொந்தக்காரர்களுக்கு ஆபத்தோ என்பதை இப்போது சொல்லி விடமுடியாது.

### முத்திரையில்லை

இப்படிக் 'கார்' வேண்டுமெனக் கடிதம் பெற்ற ஒரு சிலர் மந்திரிக்குத் தங்கள் பதிலைக் கடிதமூலம் தெரிவித்திருக்கின்றனர். மந்திரிக்குத்தானே கடிதம் என்ற தைரியத்திற் சிலர் முத்திரை ஒட்டாது கடிதங்களைப் போட்டிருக்கின்றனர். தபாற்கந்தோர் ஊழியர்களுக்கு மந்திரி யென்றால் என்ன, திருவாளர் மகாலிங்கம் என்றால் என்ன. முத்திரை ஒட்டப்படவேண்டிய கடிதங்களுக்கு முத்திரை ஒட்டியே யாகவேண்டும். ஆனபடியால் இவர்கள் மந்திரியின் பெயருக்கு முத்திரை இல்லாமல் அனுப்பப்படும் கடிதங்களுக்கு இரட்டைச் சலார் அறவிட்டு வருகின்றனராம். ஏதோ அரசாங்கத்துக்குப் பணம் சேருவது நல்லது தானே!

### இந்தியருக்கு யோகம்!

இலங்கையிலுள்ள இந்திய பாகிஸ்தான் பிரஜைகள் இதுவரை தங்கள் சொந்த நாடுகளுக்கு 25 ரூபாய் மாத்திரமே அரிசிப்பங்கீட்டுப் புத்தகத்தைக் காட்டி அனுப்பிவந்தனர். இனிமேல் இவர்கள் பிரதிமாதமும் 250 ரூபாய் அனுப்பலாம். இந்தியா செல்பவர்கள் 200 ரூபாய் எடுத்துச் செல்லவும் அனுமதியுண்டு. பொதுத் தேர்தலை முன்னிட்டு இப்படி எத்தனையோ பல சௌகரியங்கள் கிடைக்கக்கூடும்.

### விதானைமாருக்கும் யோகம்

இலங்கையிலுள்ள கிராம விதானைமாருக்கு யோகம் அடிக்கின்றது! இவர்கள் அரசாங்கத்தின் செலவில் பிரதமர் வீட்டுக்குச் சென்று அவருடன்பேசி விருந்துண்ணப்போகின்றனர். பிரதம தேசாதிபதியையும் அவருடைய மாளிகையிற் சந்தித்து அளவளாவிப் பேசப் போகின்றனர். தேர்தல் காலம் நெருங்க நெருங்க நன்மை தீமைகளும் நெருங்கி வருகின்றன.

## அமுதனைய தமிழ்மொழியின் சக்தி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எழுத்தாளர் மகாநாட்டுக்கு **வீரகேசரி** ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் அவர்கள் தலைமை தாங்குவார்கள். காந்திய தத்துவத்திலும் தெய்வ நம்பிக்கையிலும் தமிழின் சக்தியிலும் திளைத்துள்ள அன்பர் ஹரன் அவர்கள், பத்திரிகைத் தொழிலிலும் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். இவருடைய தலைமையில் எழுத்தாளர்கள் கூடிச் சங்கம் நிறுவுவது சம்பந்தமாக ஆராய்வார்கள். அனைவரின் ஒத்துழைப்பும் இவர்களுக்குக் கிடைத்தேயாகவேண்டும். இவற்றையெல்லாம் கவனிக்கும்போது கண்டியிலே தமிழ் விழா மிகுந்த உற்சாகத்துடன் நடைபெறுமென்றே கூற வேண்டியிருக்கின்றது. இயற்கை வளம் நிறைந்த மலைநாட்டிலே இலக்கிய வளமும் செறியுமாயின அத்தகைய சிறப்பைக் கூறவும் வேண்டுமா?

கூளப்ப நாயக்கன் காதல் என்ற தமிழ்ப் பிரபந்தத்திற் சுப்பிரதீபக்கவிராயர் மலையைப் பற்றிக் கூறும்போது, அதன் வள்ளன்மையை மிக அற்புதமாகக் கற்பனை செய்துள்ளார். மலையானது இனிய தேனை மக்களுக்கு அளிப்பதுடன் திருப்தியடையாமல் வானுலகத்திலுள்ள தேவர் அமுதத்தையும் வழங்குவதற்காக வானளாவி நிற்கின்றதாம்! அதேபோன்று, கண்டியிலுள்ள மலைகளும் உலக மக்களுக்குச் சுவைமிக்க தேனை வழங்குவதுடன் இருப்பதின்று .... வானுலகில் வளர்கின்றன. எதற்காக? தேவர் அமுதினையும் பெற்று வழங்குவதற்கு எனக் கூறின் அது மிகையாகாது.

கண்டியிலுள்ள இம்மலைகள் தேவர் அமுதம்பெறுவதற்காக இனி முகிற் கூட்டங்களுடன் மோதுப்படவேண்டியதே இல்லை. ஏனெனின் கண்டியில் நடைபெறும் தமிழ்விழாவிலே, 'தெள்ளூற்ற தமிழமுதின் சுவை கண்டார்' அமரர் சிறப்பையுங் காண்பார்கள். தமிழமுதத்தை அவர்கள் உண்டு களிப்பார்கள்!

— **இராஜ அரியரத்தினம்**

## அழியுங்கள்! எரியுங்கள்!!

[1-ம பக்கத் தொடர்ச்சி]

அறிவுடையோர்களின் செய்கைகளல்ல.

சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள் மிருகபலியை ஆதரித்து நிற்பதற்குக் கூறுங் காரணத்தைக் கேளுங்கள்: "கோயிற் பூசகர்கள் பொங்கலும பூவும் பழமுங் கொண்டு சுவாமிக்கு நிவேதிப்பதுபோற் பக்தர்கள் ஆடு கோழிகளை நிவேதிக்கின்றனர். இது மதாசார விதிகளில் அவசியமானதாகவே கருதப்படுகின்றது."

இதுதானா திருவள்ளுவர் தெய்வத் தமிழிற் போதித்துள்ள அறநெறி?

'கணுக்கேணி வயிரவருக்கு கீர்த்தி செய்து கடா வெட்டலாகா'தென்று சைவபோதம் சாற்ற, அதன் ஆக்கியோன திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் அணுக்குண்டு யுகத்தில தமது அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டதுங் காலத்தின கோலந்தான. நிதானமற்றவர்கள் அவல நிலை காரணமாகக் கூக்குரல் போடுவதற்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டியதேயில்லை. தர்மமானதும் நீதியானதுமான காரியத்தைச்செய்வதே முறையாகும்.

## வானிசை

★ வசந்தன் ★

### கொழும்பு வானொலி

இலங்கையில் ஜலதரங்கம் வாசிக்கக் கூடியவர் சசிலேகா ஒருவர்தான் என்று கொழும்பு வானொலி மூலம் அறியக்கிடக்கின்றது. இவரைப் பாராட்டுகிறோம்.

இவருடைய வாசிப்பு நன்றாயிருந்தது. ஆனால் இவர் தெரிந்தெடுத்த பாடல்கள் சில இந்த வாத்தியத்துக்குப் பொருந்தா. பந்துவராளியில் வாசித்த 'சம்போ மகாதேவா' என்ற உருப்படி இதற்கு ஓர் உதாரணம். இது எவ்வளவு அழுத்தமாக வாசிக்கப்பட வேண்டிய உருப்படி என்பதை வித்துவான்கள் பாடும்பொழுது கேட்டால் இந்த உண்மை விளங்கும். ஜலதரங்கக் கச்சேரிக்கு அரை மணித்தியாலம் கொடுக்கத் தேவையில்லை.

திரு. கே. தாமோதரம்பிள்ளை

இவரது சாரீரம் இன்னும் சுத்தமாகப் பேச வேண்டும். 'வேல் முருகனை' என்ற பாடல் பாவத்துடன் பாடப்பட்டது. தேஷ்ராக வடிவம் தெளிவாகவில்லை.

செல்வி இராஜேஸ்வரி நாகலிங்கம்

வீணையும், பாட்டும் — 'குரல் இல்லாவிட்டால் விரல்' என்று சங்கீதகாரர்களுக்குட் பேசப்படுவது. அதாவது சாரீர வசதியற்றவர்கள் தமது கலைத்திறனை வாய்ப்பாட்டால் வெளியிட முடியாத நிலையில் வாத்தியங்களைப் பயின்றேனும் தமது திறனை வெளிப்படுத்துவதைக் குறிக்கும். நம்மவர்களுள் அனேகர் இதை விளங்கியதாகத் தெரியவில்லை. இரண்டுங் கெட்டுத் திண்டாடுகிறார்கள். கொழும்பு வானொலியிலேதான் வீணையுடன் வாய்ப்பாட்டுக் கச்சேரிகள் நடைபெறுகின்றன. ஆனால் இசைக்கலை உயர்வா யிருக்கும் இந்திய வானொலி நிலையங்களில் இந் நிகழ்ச்சிகள் அபூர்வம்.

குரல் விரல் இரண்டும் வசதியுள்ளவர்கள், பாட்டுடன் வாத்தியத்தையும் உன்னதமாகக் கையாண்டால் ஆனந்தப்படுவோம். இப்படி அமைவது அருமை.

இந்த உண்மைகளைச் சிறிது சிந்தித்து நம்மவர் தமக்கு இருக்கும் திறமைகளையும் குறைகளையும் கண்டு ஊக்கத்துடன் உழைத்தால் கலையையும் தம்மையும் மேம்படுத்திக்கொள்வார்கள். கொழும்பு வானொலியில் வீணையுடனபாடுபவர்களில ஒருவரேனும் வாய்ப்பாட்டைத தாத்துடன் பாடுவதில்லை. அவர்கள் வீணையை நன்றாக வாசித்தாலே போதும்.

செல்வி இராஜேஸ்வரி நாகலிங்கம் வாசித்துப்பாடிய பியாக் இராகப்பாட்டு நன்றாயிருந்தது. தேவகாந்தாரி இராகப் பாடலை இவர் நன்றாக அப்பியசிக்கவில்லை என்பதை இவர் வாசிப்பிலும் பாட்டிலும் கண்டோம். 'தாயே வந்தனம்' என்ற தன்யாசிப் பாடலில் இராகங்கள் பூரணமாக வெளிவரவில்லை. இவருடைய சாரீரம் தாரஸ்தாயிற் சஞ்சரிக்க மறுக்கிறது. இடைவிடாத சாதகத்தினால் இவர் வீணை வாசிப்பு மேம்பட வழியுண்டு.

திரு. ஏ. முத்ததம்பி

புல்லாங்குழல் - குழலில் இனிமையில்லை. இவர் நன்கு சாதகம் செய்து வாத்தியத்தில் ஒரு சுகத்தை உண்டுபண்ணித்தானே அனுபவித்து வாசிக்கப் பழகவேண்டும்.

திருமதி சண்முகவல்லி

இவர் சாரீரத்தை இப்பொழுது ஓரளவிற் பயிற்சி செய்திருக்கிறார் எனத் தெரிகிறது. சென்ற முறையிலும் பார்க்க இம்முறை நன்றாகப் பாடினார்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் தலைவர் நேரு

## நிர்வாகப் பொறுப்பு அதிகரித்தல்

காங்கிரஸ் தலைவராகவிருந்த புருஷோத்தம தாஸ் தாண்டன் அவர்கள் பதவியினின்று விலகிக்கொண்டார். அகில இந்தியக் காங்கிரஸ் நிர்வாக சபையினர் நேருஜி அவர்களைத் தலைவராகத் தெரிந்தெடுத்துள்ளனர். காரியநிர்வாக சபையினர் பதவிகளை விட்டு நீங்கிய காரணத்தால் திரு. தாண்டன் மிக்க பரிதாபமான நிலையை அடைந்தனர். மறுபடி தலைமையை வகிக்கத் தாண்டன் விரும்பவில்லை. இப்போது நேருஜியின் பொறுப்பு மிக்க அதிகமாய் விட்டது. இந்தியாவின் அரசியற் பாரத்தையும் அவரே தாங்கவேண்டியவராயினர். அத்துடன் பொறுப்பு வாய்ந்த காங்கிரஸ் தலைவர் பதவியையும் தாங்குவதென்றால் சாமானிய விஷயமா? நெருக்கடியான இச்சந்தர்ப்பத்தில் எவ்வித கஷ்டமான வேலையையும் ஏற்காமல் விடுவதெப்படி? எனவே காங்கிரஸ் நிர்வாகம் புதிதாகத் திருத்தியமைக்கப்படும்.

### தூய்மைப்படுத்த!

இவ்வளவு திருத்தங்களையும் மாற்றங்களையும் காங்கிரஸிற் கொணர்ந்தது அதனைத் தூய்மைப்படுத்தவே என்பது யாவரும் அறிவர். காங்கிரஸ் ஸ்தாபனத்தில் உட்கலகமும் வித்தியாசங்களும் இருப்பின் அது எப்படி இனிது தொழிற்படக் கூடும். பிரதமர் நேரு இனி, தமது எண்ணப்படி காரிய நிர்வாகசபையினரைத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான். திரு. தாண்டன் என்ன செய்வாரோ தெரியவில்லை. அடுத்தமாதம் 18-ந்திகதி விசேஷ காங்கிரஸ் மகாசபை கூடும். அதில் செய்யப்படும் தீர்மானங்களே மிக்க முக்கியமானவையாகும். பொதுத் தேர்தல் அடுத்து வருகின்றமையால் அதற்கேற்ற அபேட்சர்களைத் தெரிவது காங்கிரஸின் விசேஷ கடமையாகின்றது. நேர்மையும் ஆற்றலும் வாய்ந்தவர்கட்கேயன்றி மற்றையவர்கட்கு இடமளிக்கப்படாதென்பது பண்டிதரின் கோரிக்கை. இப்போது காங்கிரஸ் ஸ்தாபனத்தில் இடம் பெற்றுள்ள ஒரு சிலர் நேர்மையும் ஆற்றலுமில்லாதவர்கள். இவர்களாற்றான் காங்கிரஸ் அரசியல் சில மாகாணங்களில் மிக்க பழுதடைந்துள்ளது. இச் சீர்கேடுகளை நிவிர்த்தி செய்து மிக்க பெலமும் நேர்மையும் வாய்ந்த அரசியலை அமைப்பதே நேருஜியின் விருப்பம்.

### இந்தியா

### ஐ. நா. பிரதிநிதி

சென்ற இரண்டு மாதங்களாக இந்தியாவிலும் பாகிஸ்தானிலுந் தங்கி இரு நாடுகட்கிடையிலும் இணக்கம் வருமோ என்று முயன்ற டொக்டர் பிராங் கிரகாம் இப்போது ஐரோப்பா திரும்பியுள்ளார். இவர் புறப்படுவதற்கு முன்னர் பண்டிதர் நேருவுடனும் பாகிஸ்தான் பிரதமருடனும் நீண்ட சம்பாஷணை நடத்தினர். இந்திய அரசினர் முன்னின்ற தர்மமான நிலையினின்று சிறிதும் இளகவில்லை. பாகிஸ்தானரசினரின் ஒவ்வாத கோரிக்கைகளை இந்திய வரசினர் ஏற்ப தெப்படி? விஷயங்களை நன்கு ஆராய்ந்து நோக்கிக் கொண்டு இவர் ஜெனீவா சென்றுள்ளார். இனித் தம்முடைய அறிக்கையை ஐ. நா. சங்கத்துக்குச் சமர்ப்பிப்பார். அவ்வறிக்கை எப்படியாகுமோ தெரியவில்லை. ஐ. நா. சங்கத்தில் ஆதிக்கம்செலுத்தும் அமெரிக்கரும் பிரிட்டிஷாரும் பாகிஸ்தானுடன் பரிந்து நிற்பதுதான் வேடிக்கையாகின்றது.

# வலிகாமம் வடக்குத் தமிழ்ப் பாடசாலைகள் சங்கீதவிழா

வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்க நிதிக்காக ஷெவிழா சென்ற 8-9-51 சனிக்கிழமை பிற்பகல் 4½ மணிக்கு இணுவில் காளிங்கன் படமாளிகை மண்டபத்தில் வட பெரும்பாக உதவி வித்தியாதிகாரி ஜனாப் எம். பி. நூர்தீன் அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு. எஸ். கந்தவனம் அவர்கள் விழாத் தலைவருக்கு மாலைசூட்டி வரவேற்றனர். விழா மண்டபம் நிறைந்ததுமன்றி இருக்க இடமின்மையால் அனுமதிச் சீட்டுக்கள் விற்பனையும் நிறுத்தப்பட்டு அனேகர் திரும்ப நேர்ந்தமையையிட்டுச் சங்கம் வருத்தம் தெரிவிக்கவும்நேர்ந்தது.

பாட்டு, நடனம், கும்மி–கோலாட்டம், நடிப்பு ஆகிய அங்கங்களைக்கொண்ட 29 நிகழ்ச்சிகளில் 20 தமிழ்ப் பாடசாலைகள் பங்கு பற்றித் தமது திறமையைக் காட்டின. விழா முடிவில் தலைவர் ஜனாப் நூர்தீன் அவர்கள் நடைபெற்ற விடயங்களின் திறமைகளைக் குறித்து மிகவும் பாராட்டிப் பேசினர். அதன்பின் தலைவர் அவர்களுக்கும், இவ்விழாவினைச் சிறப்புற நடாத்துவதற்கு இடைவிடாத முயற்சியோடு ஒத்துழைத்துப் பெரும் பணியாற்றிய வட்டார வித்தியாதரிசி திரு. ஏ. சந்திரசேகரம் அவர்களுக்கும், மத்தியஸ்தர்களுக்கும், பரிசில்கள் உதவியவர்களுக்கும், சங்கத்தின்கேள்விப்படி தமது மாபெரும் படமாளிகையை மனமகிழ்ச்சியோடு தந்துதவிய இணுவில் காளிங்கன் படமாளிகை முகாமைக்காரர், திரு. வி. கே. வைரவப்பிள்ளை அவர்களுக்கும், இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை ஆசிரியர்களுக்கும்காரியதரிசி பண்டிதர் ச. பொன்னுத்துரை அவர்களால் நன்றி கூறப்பட்டது.

மத்தியஸ்தர்கள் தீர்ப்பின்படி முதல் மூன்றிடங்கள்பெற்ற பாடசாலைகளின் பெயர்கள் வருமாறு:

பாட்டு: 1. ஏழாலை A. M. பாடசாலை; 2. தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை; 3. உடுவில் முருகமூர்த்தி சைவ வித்தியாசாலை.

நடனம்: 1. அளவெட்டி சீனன்கலட்டி வித்தியாசாலை; 2. வருத்தலைவிளான் A. M. பாடசாலை; 3. தெல்லிப்பழைகிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை.

கும்மி – கோலாட்டம்: 1. ஏழாலை அரசினர் பிரதம பாடசாலை; 2. மல்வத்தை R. C. பாடசாலை; 3. தெல்லிப்பழைகிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை.

நடிப்பு: 1. அளவெட்டி சதானந்த வித்தியாசாலை; 2. அளவெட்டி சீனன்கலட்டி வித்தியாசாலை; 3. அளவெட்டி அருணோதயம்[?] சலம் வித்தியாசாலை.

# நமது வாசிகசாலை

THE IDEOLOGY OF THE CHARKA—SRIKRISHNADAS JAJU. *Published by*: the A. I. S. A. Sarvodaya Prachuralayam, Tirupur, *Price*: Annas 14.

சர்க்காவின் தத்துவத்தை விளங்கினால் காந்தியடிகளின் இலட்சியங்களை ஒருவாறு விளங்கினதாகக் கூறலாம். பொதுவாகக் கூறுமிடத்துக் கதர் இயக்கம் இந்தியாவின் வறுமையைப் போக்கவந்த இயக்கமென்று கொள்ளலாம். காந்தியடிகளே கதர் இந்தியாவுக்கு ஒரு காமதேனு என்று கூறியுள்ளார். கூர்ந்து நோக்கும்பொழுது கதர் ஒரு புது பொருளாதாரத் தத்துவத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்குவதையுங் காணலாம். கூடுமான வரையில் யந்திரங்களின் உபயோகத்தை மனிதன் குறைத்துக் கொள்ள வேண்டுமென்பது காந்தியடிகளின் கொள்கை. யந்திரங்கள் ஏற்பட்டால் தொழிலாளி முதலாளி என்ற பிரிவினைகள் உண்டாகிப் பல பிரச்சினைகள் தோன்றுமென்றும், கதர் இயக்கம் மூலம் இதனை ஒருவாறு தடுக்கலாமென்றும் காந்தியடிகள் கண்டார். மேலும் ஒவ்வொரு மனிதனும் தினந்தோறும் ஏதேனும் ஒருவகையான சரீர உழைப்பில் ஈடுபடவேண்டுமென்பது காந்தியடிகளின் இலட்சியங்களில் ஒன்று. இதற்குச் சர்க்காவே மிகவும் உகந்ததென்பது காந்தியடிகளின் அனுபவம். இவைபோன்ற விஷயங்கள் இந்த ஆங்கில நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல் காந்தியடிகளின் எழுத்துக்கள் பேச்சுக்களிலிருந்து பொறுக்கப்பட்ட மணிகளாலான ஒரு கோவையாகும்.

—ச. அ.

# வானிசை

4-ம் பக்கத் தொடர்ச்சி

காக்ரப்பிரியா உருப்படியை நன்கு பாடினார். ஹிந்தோளப் பாடலும் கற்பனை சுரங்களும் நன்றாக இருந்தன. ஆனால் தாள நிச்சயம் இவருக்கு இன்னும் வலுவடையவில்லை. நாட்டக் குறிஞ்சியில் பாடிய 'நீது மூர்த்தி' என்ற பாடலை அவசரப்பட்டுப் பாடி மூன்று நிமிஷங்களை மிருதங்கம் வாசித்தவருக்குக் கொடுத்தமை அரை மணித்தியாலத்துக்குக் கணக்கிட்டுப் பாடமுடியாதென்ற எண்ணத்தை உண்டாக்குமல்லவா?

### வாத்தியக் கோஷ்டியுடன் பாட்டு

திரு. இராசலிங்கம் அவர்கள் பாடத் தொடங்கியபொழுதும் முடித்த பொழுதும் இருநத பதட்டத்திலிருந்து அவர் வாத்தியக்கோஷ்டியுடன் அதிக ஒத்திகை செய்யவில்லை என்பது புலனாயிற்று. 'கருணை செய்குவாய்' என்று ஹம்சத்வனியில பாடினார். இப் பாடலில் என்னைக் கருணை செய்குவாய் என்று வருமிடங்கள் பொருட்பொருத்தமில்லாதது போலிருந்தன. இராமபக்தி என்ற பாடல் அழகாயிருந்தது. 'உய்யும் வகை' என்ற சங்கராபரணப் பாடலில் ஒரு சங்கதி வைத்தபொழுது உய்யும் வாகை என்று தொனித்தது. வாகை மாத்தைப்பற்றித் பாடுகிறாரோ என்று பாடல் முழுவதையும் கேட்டபொழுது மாத்தைப்பற்றிய பாடலல்ல என்று அறிந்தோம். சொற்களிற் கவனம் செலுத்த பேண்டும். சங்கதி என்று சொல்லி உருப்படிகளின் கருத்துக்களைக் கெடுக்கக் கூடாது. 'பாங்கிரிப் பெருமானே' என்ற ஒரு புதிய பாடலை நன்றாகப் பாடினார். கருபயாபாலய என்ற சாருகேசிப் பாடல் சங்கதித்தெளிவற்றிருக்கது.

# கொழும்பு – நிருபர் கடிதம் –

## கல்வி ஒலிபரப்பு அபிவிருத்தி

14-9-51

இலங்கையிலே சரித்திரக்கையெழுத்துப்பிரதிகள் ஆராய்ச்சிச் சபை ஒன்று பல வருடங்களாகச்சேவை செய்து வருகின்றது. அநேக அறிக்கைகளை அது வெளியிட்டுச் சரித்திர சம்பந்தமாக உதவி புரிந்து வருகிறது.

ஆனால் ஐரோப்பாவுக்கும் பிரிட்டனுக்கும் சென்று இலங்கைச் சரித்திரம் சம்பந்தமான புராதன கையெழுத்துப் பிரதிகளைத் தேடிச் சேகரிக்க அரசினர் செலவில் திரு. ஜோன் எம். செனவிரத்ன தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளார். இதன் தலைவர் பேராசிரியர் எஸ். ஏ. பேக்மன் கல்வி மந்திரியிடம் ஒரு கண்டனம் சமர்ப்பித்துள்ளார். இந்தச் சபையின் தலைவரை அல்லது அங்கத்தவர்களுள் ஒருவரை அனுப்பாது விட்டது இந்தச் சபையினையே அவமதிப்பதாகும். யு. என். பி. உதவியிருந்தால் உலகம் சுற்றிப் பார்க்கலாம் தானே.

### பாடசாலை ஒலிபரப்பு

இதுவரை வித்தியாபகுதி நடத்திவந்த பாடசாலை ஒலிபரப்பு இந்தத் தவணை தொடக்கம் கொழும்பு வானொலி கல்வி ஒலிபரப்புப் பகுதியால் நடாத்தப்படும். இப்பகுதிக்குப் பொறுப்பாக செல்வி எம். எலியாஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார். இம்முறை நிகழ்ச்சிகளில் அதிக அபிவிருத்தி காணப்படுகிறது. சிறந்த விற்பன்னர்கள் ஒலிபரப்ப முன்வந்திருக்கின்றனர். பாடசாலை யாசிரியர்கள் இந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாகக் கூறும் ஆலோசனைகளையும் அறிவதற்கு ஒழுங்கு செய்யப்படுகிறது. பேராசிரியர் சாம்பமூர்த்தி, கிருஷ்ண ஐயர் முதலான பல அறிஞர்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்தச் சம்மதித்துள்ளனர்.

தேசியமொழி விசாரணைச் சபையின் முதலாவது இடைக்கால அறிக்கை வெளிவந்துவிட்டது. இவர்கள் உத்தியோக பரிபாஷைச் சொற்களைச் சேகரித்து ஒரு அகராதி தொகுக்க வேண்டுமெனவும் சுருக்கெழுத்தாளர், கையச்சாளராகப் (ரைப்பிஸ்ற்) பயிற்றப்படுவதற்குச் சிங்களத்திலும், தமிழிலும் வகுப்புகள் நடத்தவேண்டுமெனவும் சிபார்சு செய்திருக்கின்றனர். தற்பொழுது வழக்காற்றிலுள்ள சொற்களைச் சேகரிக்கவும், புதிய சொற்களே வேண்டுமிடத்து ஆக்கவும், அவற்றைத் தரப்படுத்தவும் ஒரு நிர்வாக சபை நியமிக்கச் சிபார்சு செய்திருக்கின்றனர். அத்துடன் உத்தியோகத்தர்கள் தமிழிலும் சிங்களத்திலும் அரசாங்கக் கருமங்களைச் செய்யப் பயிற்சியளிக்கவும் திட்டம் விடுத்திருக்கின்றனர்.

### திரிகோணமலை விக்கிரகங்கள்

கொழும்பு ஜிந்துப்பிட்டி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் இருந்த கோணேசர் ஆலய விக்கிரகங்கள் இவ் வாரம் நீர்கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

### கொழும்புத் தமிழ்ச் சங்கம்

ஞாயிற்றுக்கிழமை (16.9.51) மாலை 5–30 க்குக் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் பாரதி விழா வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

### அறிஞர்கள் விஜயம்

கண்டியில் நடைபெறவிருக்கும்தமிழ்ச் சங்க ஆரம்பவிழாவிற் பங்குபற்றுவதற்காகச் சென்னையிலிருந்து கலைமகள் ஆசிரியர் திரு. ஜகந்நாதையர் அவர்களும் திருச்சியிலிருந்து தமிழ்ப் பேராசிரியர் திரு. எஸ். சோமசுந்தரபாரதியார், அவர்களும் விமானமார்க்கமாக வியாழக்கிழமை கொழும்புவந்து சேர்வார்களென்று அறிகின்றேன்.

# சுன்னாகம்

## ஸ்ரீ சதாசிவ பிராசீன பாடசாலையும் ஸ்ரீ சதாசிவ நூல்நிலையமும்

ஸ்ரீ சதாசிவ பிராசின பாடசாலை முப்பது ஆண்டுகட்கு முன்னதாகக் காலஞ்சென்ற பிரமஸ்ரீ யா. தி. சதாசிவ ஐயர் அவர்களால் சுன்னாகத்தில் நிறுவப்பட்டுப் பல ஆண்டுகளாகத் தமிழ், வேதம், ஆகமம் முதலிய பாடங்கள் வித்வான் பிரமஸ்ரீ சி. கணேச ஐயர் அவர்களாலும், வேதவ்சாரர் பிரமஸ்ரீ வி. சிதம்பரசாஸ்திரியார் அவர்களாலும் முறையே கற்பிக்கப்பட்டுவந்தன. இவ் வித்தியாசாலையிற் கற்றுச் சித்தியெய்திய பாலபண்டித, பண்டிதர்கள் பலர். எனினும், அரசாட்சியார் போதிய ஆதரவு பலவழிகளாலும் காட்டாததனால், மாணவர்களின் ஆர்வமும் ஊக்கமும் குன்றின. பாடசாலையும் சில ஆண்டுகளாக இயக்கமற்றிருந்தது.

பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களது குன்று முயற்சியினால் 1948-ம் ஆண்டு தை மாதம் திரும்பவும் இப் பாடசாலை புத்துயிர் பெற்றுச் சனி, ஞாயிறு வாரங்களில் ஒழுங்காக நடைபெற்றுவருகிறது. வியாகரண பண்டிதர் பிரமஸ்ரீ சீதாராம சாஸ்திரியார் அவர்கள் ஆசிரியராகக் கடமை ஆற்றிவருகின்றனர். நாற்பது மாணவர் வரையில் நான்கு பிரிவினராகக் கல்வி கற்றுவருகின்றனர்.

பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள் மேற்படி பாடசாலையையும், அதற்குரிய நிலம் ஏழு பரப்பையும், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தாம அரிதாகச் சேர்த்துவைத்த ஆயிரம பிரதிகட்கு மேற்பட்ட தொகுதி கொண்ட நூல்நிலையத்தினையும், அவைகளைச் செவ்வனே பாதுகாத்து மேற்பார்வை செய்யும் பொருட்டு ஒரு நியாசதார சபையையும் ஏற்படுத்தியுள்ளார்.

மேற்படி ஐயர் அவர்களின் தர்மத்தை வளர்ப்பது எங்கள் எல்லோரதும கடமையாகும். மேற்படி நூல் நிலையம் எல்லோர்க்கும் பயன் தரும்படி திறந்துவைத்தல் மிகவும் அத்தியாவசியம். அத்துடன் ஐயர் அவர்களின ஞாபகசின்னமாக அவர்களது படத்தை நூல்நிலையத்தில் வைததல் பொருத்தமுடையதாகும்.

இவைகள் எல்லாவற்றையும் நல்லமுறையிற் செய்து முடிப்பதற்குப் போதிய பணந் தேவை. அதற்குத் தமிழ் அன்பர்களும், ஐயர் அவர்களின் நண்பர்களும், அபிமானிகளும இயன்ற பொருள் உதவி, எம்மை ஊக்கப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

ச. சேதுகாவலர் — ச. முத்துக்குமாரசாமி ஐயர்
தி. வைத்தீஸ்வர ஐயர் — ச. தியாகராசசிவ ஐயர்
சீ. கார்த்திகேச ஐயர்

ஷ நியாசதாரசபையினர்
சுன்னாகம், 12-9-51

குறிப்பு: பணம் அனுப்புவோர், சீ. கார்த்திகேச ஐயர், மயிலணி, சுன்னாகம், என்ற விலாசத்திற்கு 31-10-51க்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ சாளரத்தினூடாக வந்து உள்ளே நுழைந்த சூரிய ஒளி, தரையிலே தவழ்ந்த கடிதத்திற் பதிந்தது.

# நெல்லும் புல்லும்

இ. அம்பிகைபாகன்

பன்னிரண்டுமுறை அடித்து அலுத்துப்போயிற்றுக் கடிகாரம். ஆனால், அதன் இதயத்துடிப்பு, 'டக் டக்' கென்று இரவின் அமைதியைத் துளைத்து நுழைந்துகொண்டிருந்தது.

புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தேன். என் படுக்கை நொந்தது. படுத்துப் புரண்ட என் உடம்பு நொந்தது. தன்னுள்ளே தானாக வெந்து வெடித்துக்கொண்டிருந்த என்உள்ளம் நொந்தது. இந்நிலையில், எனக்குச் சுகந்தரக்கூடியது ஒன்றுமிருக்கவில்லை.

உணர்ச்சியின் வேகத்தில் உள்ளந் துடிதுடிக்க, உலகமே சுழன்றுகொண்டிருக்க, சிந்தனைவெள்ளம் அவனையும் அலசிக்கொண்டு காடுமேடெல்லாம் புரண்டோடிவர, சுகமென்பதுதான் ஏது? இவ்வேளையில், தூக்கந்தான் ஏது? நான் விரும்பியபடி செய்வதற்கு, அது என் அடிமையா? —

எழுந்து அப்படியே படுக்கையில் இருந்துகொண்டேன். இருளும், அறையுட் பதுங்கியிருந்தது. என்னைப்போலவே அதுவும் விழித்துக்கொண்டிருந்தது. என் உள்ளத்தினுள்ளும் இருள் குடிகொண்டு, இருளினுள்ளே நானும், என்னுள்ளே இருளுமாய், நானும் இருளும் இரண்டறக் கலந்துகொண்டோம்.

நள்ளிரவிலே தன்னந் தனியாக, இருளினுள்ளே விழித்துக்கொண்டிருப்பதுதான் சுலபமான விஷயமா? எத்தனையோ மணித்தியாலங்கள் மறைந்து, விடியுஞ் சமயம்போலிருந்தது. விடியுஞ் சமயந்தானா என்றுபார்ப்பதற்காகச் சாளரத்தினூடாகப் பார்த்தேன்....

"டாண்" —

ஒரே ஒரு நிதானமான அறை. என் இதயம் திக்கென்றது! ஆனால், ஒரு க்ஷணம் தான். இரவின் அமைதி, இரு கூறுகளாகிப் பின்பும் ஒன்றாகியது. கடிகாரத்தின் இளைப்பைப் பிரதிபலிப்பதுபோல வந்துகொண்டிருந்த 'டக்,டக்' என்ற சத்தம், திக்குத் திக்கென்று கொண்டிருந்த என் இதயத் துடிப்பைக் குத்திக் காட்டிக்கொண்டிருந்தது.

ஆனால்? —

நேரமென்ன? பன்னிரண்டரையா, ஒன்றா, ஒன்றரையா? — பன்னிரண்டு மணிக்குப்பின், இந்த ஒரு சத்தந்தானே என் காதில் விழுந்தது! அவ்வளவு நேரமும் போக அரை மணித்தியாலந்தானா? என்று ஐயப்பட்டது என் மனம்.

எழுந்து மின்சார விளக்கை அழுத்தினேன். இருள் விழுந்தடித்துக்கொண்டு வெளியே பாய்ந்துவிட எத்தனித்தது. ஆனால், வழி இல்லாமல் அங்குமிங்கும் ஓடி, இறுதியிற் கட்டிலின் கீழும், அலமாரியின் பின்னும் ... .... என்பின்னேகூடப் பதுங்கித் திக்குமுக்குப்பட்டுக் கொண்டு விழித்தது!

பன்னிரண்டரை மணி —

அரை மணித்தியாலங்கழிய இவ்வளவு நேரம்! என்று ஒரு பெருமூச்சுவிட்டேன். நீ அவளுடன் ஆவலோடு பேசிக்கொண்டிருக்கையில் துள்ளிக் குதித்துப்பாயும் நேரம், இப்பொழுதுமட்டும் ஏன் தவழ்ந்து செல்லவேண்டும்? என்று உசலித்துக்கொண்டேன்.

லொடக், லொடக் என்றுகொண்டு, ஒரு மாட்டு வண்டி, என் மனதைப்போல வீதியின்வழியே போய்க்கொண்டிருந்தது. வண்டியின் கீழ் தொங்கிக் கொண்டிருந்த, வண்டியிலும் பன்மடங்கு தளாடிய ஒரு விளக்கின் மங்கல் ஒளி, என் மனதிலிருந்து மங்கும் நம்பிக்கையைப் பிரதிபலிப்பதுபோல இருந்தது. வண்டியிலிருந்த சுமையும் என் மனச் சுமையிலுங் குறைந்ததல்ல. நானும் அந்த வண்டியின் மாடுகளும் ஒரே நிலையிற்றான் இருந்தோம்!

அவசர அவசரமாக ஏதும் படித்தால், அல்லது வாசித்தால், எங்கிருந்தோ நித்திரை ஓடோடி வந்து கண்களை இறுகப்பொத்தி விளையாடும். என்னை நித்திரை உலகுக்கு அனுப்பிவைத்துவிடும். இப்பொழுதும் அதேமாதிரி நித்திரையை வாங்குவோமா? என்று எண்ணி, அவ்வறையில் இருந்த ஏதோ ஒரு புத்தகத்தையெடுத்துப் புரட்டிக்கொண்டு,படுக்கையிற்சாய்ந்தேன்.

புத்தகத்தின் உள்ளே இருந்த ஒருகடிதம், என் நெஞ்சிற் படுத்தது. ஜன்னலினூடாக ஓடிவந்தகாற்று, அதைத்தட்டியெழுப்பி, மேலெழுப்பியது!

எவ்விஷயம் என்னை அவ்வளவுநேரமும் விழித்திருக்கச் செய்ததோ, அவ்விஷயத்தின் விதையேதான் அக்கடிதம். எவ்விஷயத்தைமறந்து தூங்கநான் சமயம் பார்த்துக்கொண்டிருந்தேனோ, அதைக் கிண்டிக் கிளறவே அவகாசம் ஏற்பட்டது!

அக்கடிதத்தை எடுக்க என் கைகள் விரும்பவில்லை. ஆனால், அதன் நிலையைப் பார்க்காமல் இருக்கக் கண்கள் சகிக்கவில்லை. தாமாகவே, அக்கடிதத்தின்மீது பாய்ந்தன.

"உமது அடைக்கலம்புகுந்த, ஸுவர்ணா"

தரையின்மீது கிடந்த கடிதத்தின் மேற்பக்கத்தில், என் கண்களுக்கு அகப்படக்கூடிய நிலையில் இருந்தது, அந்த முடிவே!

"உனது ஸுவர்ணா; அடைக்கலம் புகுந்த ஸுவர்ணா" என்று யாரோ என் காதுள் முணுமுணுத்தார்கள். "அவளைக் கைவிடாதே!" என்றது என்னுள்ளம்.

அக்கடிதத்தைப் பின்னும் பார்க்க வசதி ஏற்படாமற் செய்வதற்காக, எழுந்து மின்சாரவிளக்கை அழுத்தினேன். கட்டிலின்கீழ் பதுங்கிக்கிடந்த இருள், ஒரே பாய்ச்சலாய், அறையுட் பரவியது! ஏதோ ஒரு காரணமில்லாத அச்சம் என்னுள்ளத்துட் புகுந்தது. போர்வையை எடுத்து, என்னை முற்றும் மூடிக்கொண்டு, படுத்தேன். ... ... ...

* *

வானம் பொய்த்து, வயல்களையும் வாவிகளையும்கூட வனாந்திரம்போல வாட்டியது.

வானையே பார்த்து வருந்திய கமக்கார உள்ளங்கள், இந்தப் பிள்ளையாருக்கும், அந்த அம்மனுக்கும் எத்தனையோ வாக்குறுதிகள்செய்ய ஆரம்பித்தன. பிள்ளையாரின் உள்ளத்தைக் குளிரச்செய்தால் வானும் குளிரும்; வயல்கள் வாவிகள் கூடக் குளிரும் என்பதுதான் நம்பிக்கை.

நாட்களோ, வாரங்களோ சென்றன. அன்று ஒரு வெள்ளிக்கிழமை. பிள்ளையாரின் சன்னிதிமுன், இளநீர்க் குலைகள் வந்துகுவிந்தன. வேறும் யார்யாரோவெல்லாம் வந்து ஏதேதோ வேலைகளைச்செய்துகொண்டார்கள். ஏதோ சடங்குகள் எல்லாம் முடிந்தபின், நெய்யுந்தேனும், பாலும், பழமும், இளநீரும் பிள்ளையாரின் உச்சியில் விழுந்து, உடம்பெல்லாம் பாய்ந்து, கீழ

[தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 7554

நவாலி
சுப்பிரமணியம் நவரத்தினம்
வழக்காளி

கண்டி உடப்பத்து
P. W. D. ஓவசியர்
கதிரவேலு கந்தையா எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7554-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள், 1951-ம் ஆண்டு ஒக்டோபர் (ஐப்பசி) மாதம் 17-ந் திகதி (17-10-51) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1860-ம், இதில் ரூபாய் 1500-க்கு 22-2-51 திகதி தொடக்கம் 18-5-51 திகதி வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 199-55 சதம்.

### காணிகளின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகக் கோவிற்பற்று மல்லாகமிறை "கட்டை சீமாவும் நாச்சி சீமாவும்" நிலைப்பரப்பு ஒன்பதும் (9) வீசம் இணறும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு, சரவணமுத்து கனகசபைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு, கணபதி பெண் தெய்விக்கும் முருகேசு பெண் கேட்ரி கதிராசிபிள்ளைக்கும் மறுபேருக்கும், கணபதியார் யேம்ஸ் முருகேசவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு, ஒழுங்கை. தெற்கு, இலங்காதன் குகதாசனுக்கும் மறுபேருக்கும் கந்தையா பெண் விசாலாட்சிப் பிள்ளைக்குமுரிய ஆதனங்கள். இதில்சொரியலாய் அரைவாசி ($\frac{1}{2}$).

2. மேற்படி மல்லாகமிறை "நாச்சி சீமா" நிலைப்பரப்பு ஒன்றும் (1) குளி $10\frac{1}{4}$ ம் பணைகளும். எல்லை: கிழக்கு, முருகேசு பெண் கேட்ரிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கும், மேற்கும், ஒழுங்கை. தெற்கு குறித்த எதிராளிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி ($\frac{1}{2}$)

3. மேற்படி மல்லாகமிறை "நாச்சி சீமா அல்லது திட்டலைத்தோட்டம்" நிலைப்பரப்பு மூன்று (3-ம்) எல்லை: கிழக்கு, கணபதி கைம்பெண் தெய்வியின் ஆதனம். வடக்கு, ஒழுங்கை. மேற்கு, குறித்த எதிராளியின் ஆதனம். தெற்கு, குறித்த எதிராளிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் நாலில் ஒரு பங்கு ($\frac{1}{4}$)

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை, 29-8-51 [4402]

# உயிர்வர்க்கங்களின் உற்பத்தி

## தசாவதாரத்தின் நுண்பொருள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### முதற் காலம்

ஸியூஷிய — ரொறிடோஸிய உபகாலங்களிற் பூமியில் மிகப்பழைய வண்டற் பாறைகள் (Sedimentary rocks) உஷ்ணத்தாலும், அமுக்கத்தாலும் பல மாறுதல்களடையப் பெற்றதாகக் காணப்பட்டன. இவைகளினிடத்தே இரும்புப் பாளங்களும் (Iron Ores), பொன்னும், மங்கனீஸ் (Manganese) என்னும் உலோகங்களும் காணப்பட்டன.

பூமியினது சீதோஷ்ண நிலையும், ஈரத்தன்மையும், கடற்கரை யோரத்தில் ஓர் வகைப் பாணிபோன்ற வஸ்துவை (Jelly like substance) உண்டாகும்படி செய்தன. இவ் வஸ்துவானது புளித்து நுரைகொள்ளச் செய்யும் பொருட்களின் (Ferments) சேர்க்கையாற் பல பகுதிகளாகப் பிரிவதுடன் அசையுஞ் சக்தியையும் அடையப்பெற்றது. இதுவே முதன் முதலாகத் தோற்றிய ஜீவாணுப் பிராணியாகும் (Protobian). இதன் தோற்றம் 100 கோடி வருஷங்கட்கு முன் நடந்ததாக அநுமானிக்கின்றனர். இச்சீவாணுப் பிராணிகளுள் 1500ஐ ஒன்றோடொன்று நீளமாக வைத்தாலும் ஒரு குண்டூசியின் தலைப்பாகத்தைத்தானும் குறுக்கிடமாட்டாது.

இவை ஒரு அறை (Cell) யுடைய மிக நுண்ணிய பிராணிகளாயிருந்தலால் பூதக்கண்ணாடியால் பார்க்கும் போதுதான் நமக்குத் தோற்றும். இவை ஆகாயத்திலும், நீரிலும், பிறவற்றிலும் வசிக்குந் தன்மையுடையனவாகும். இவைகளிலிருந்து கடலில் வசிக்கும் சீவாணுப் பிராணிகள் தோற்றின. இவை சூரிய வெளிச்சத்தினுதவியால் தங்கட்கு வேண்டிய சீனி (Sugar), மாப்பதார்த்தங் (Starch) களை ஆக்கிக்கொள்கின்றன. இத்தகைய சீவாணுப் பிராணிகள் தற்காலத்தில் நீரிலும், ஈரலிப்பான காலங்களில் மரப்புறப் பக்கங்களில் ஒட்டியும் பச்சை நிறமுடையனவாகக் காணப்படுகின்றன.

முதன் முதற் றோற்றிய சீவாணுக்கள் இரு கிளைகளாகப் பிரிந்தன. ஒன்று தாவர வர்க்கத்தைச் சேர்ந்ததும், மற்றொன்று பிராணி வர்க்கத்தைச் சேர்ந்ததுமாகும். தாவர வர்க்கத்தைச் சேர்ந்தவைகள் (Vegetable Organisms) தங்கட்கு வேண்டிய உணவுகளை நீரிலும், காற்றிலும் இருந்து பெறத் தொடங்கின. ஆனால் மிருக வர்க்கத்தைச் சேர்ந்தவைகள் அவ்விதமின்றி (Animal Organisms) தங்களிலும் பார்க்க மிக வலிமை குறைந்த பிராணிகளையே இரையாகக் கொண்டன. இவ் வர்க்கத்தைச் சேர்ந்தவைகளுள் இக்காலத்தில் வசிக்கும் நுண்ணிய பிராணியானது அமீபா (Amoeba) என்று சொல்லப்படும். இது செங்கல் மங்கல் நிறமுடையதாகவும்; கண், கால், கை முதலிய அவயவங்களற்றதாகவு மிருக்கும். இதற்கு மேற்றோலொன்றுண்டு. இதனுள் தடித்த கூழ்போன்ற திரவபதார்த்தம் இருக்கிறது. இது தனக்கு வேண்டிய உணவைத் தன் தேகத்தை வட்டமாக வளைத்து வெளியே போகவிடாது தடுத்துக் கொள்கிறது. இதனுடைய தேகமானது அரை மில்லிமீற்றர் (Half millimetre) விட்டமுடையதாகும். இதனுடைய தேகமானது சுருங்கவும், விரியவுங் கூடியதாகவிருக்கிறது.

✕✕✕✕✕✕✕✕✕✕✕✕

பிரமஸ்ரீ
சி. சுப்பிரமணிய ஐயர்

✕✕✕✕✕✕✕✕✕✕✕✕

இக் காலத்தில் வசித்த தாவரங்கள், நீர்ப்பாசிகள் போன்றனவாகும். மலேரியா, வயிற்றுளைவு போன்ற நோய்களையும், நெருப்புக் காய்ச்சல் பேதி முதலிய நோய்களையும் வருவிக்கத்தக்க ஒரு அறையுடைய (Uni cellar) மிக நுண்ணிய கிருமிகளே (Bacteria) இக்காலத்தில் வசித்தன. இக் காலத்தில் வசித்த கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய கிருமிகள் யாவும் நீரிலேயே வாழ்ந்தனவாகும்.

கம்பிறியன் உபகாலத்தில் பூமியில் மணற் கற்களும், களி மண் பாறைகளும் அதிக அமுக்கமடையப் பெற்றதால் கற்பலகை (Slate)கள் உண்டாவதற்கு இடமாயின.

முன்னர் கூறப்பட்ட கடற்பாசி (Seaweeds) களுடன் முதுகெலும்பில்லாததும, கடலிலுள்ள பிராணிகளையுண்ணும் கணவாய்களும், நட்சத்திர மீன்களும் நண்டு முதலியவற்றின் புராதன வமச உயிர்களும ஏராளமாகக் கடலிற் காணப்பட்டன. சில புழுக்கள் நிலத்திலுள்ள பொந்துகளில் வசிக்கவுந் தொடங்கின. இவைகளுடன் ரிறியோலைற் (Triolite) என்னும் ஓர் வகைப் பிராணியுங் காணப்பட்டது. இதன் முதுகில் ஓர் கடினமான ஓடும், அடிப்புறத்தில் மிருதுவான ஓடும இருந்தன. இதற்கு நீந்துவதற்கேற்ற பல கால்களுமுண்டு. —(தொடரும)

### வாலிபர் சக்தி

**வாலிபர்களிடையேயுள்ள** அற்புத சக்தியினால் நாட்டைமுன்னேற்றமுமடையச் செய்யலாம்; சீர்கெடவும் செய்யலாம். ஒவ்வொரு வாலிபனும் அதை உணர்ந்து பிறந்தநாட்டுக்கும் தனக்கும் நன்மை பயக்கும் துறைகளில் ஈடுபடவேண்டும். தனது ஓய்வு நேரத்தை உயர்ந்த வழிகளில் உபயோகிக்கவேண்டும். அதற்கு வாலிபர் இயக்கங்கள் — வாலிபர் கழகங்கள் — நன்கு வழிகாட்டும். இவ்வாறு கொக்குவில் மேற்குச் சனசமூக சங்க வாசிகசாலை முன்றிலிற் சமீபத்தில் நடைபெற்ற வாலிபர் கிராம முன்னேற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் திரு. நா. நடராசா வாலிபர் கழக அவசியத்தைப் பற்றிப் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. செ. பொன்னம்பலம் அவர்கள் தலைமைதாங்கினார்கள். பின் திரு. மு. சிவஞானசுந்தரம் தலைவராகவும் திரு. சு. திருஞானசம்பந்தர் செயலாளராகவும், திரு. சு. இராசேந்திரம் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பான மருமக்களே!**

"மாமா, மாமா, பனைமரங்களை வெட்டிவீழ்த்தக்கூடாதெனப் பத்திரிகைகளிற் படித்து மகிழ்ச்சியடைந்தேன். பாணிப் பனாட்டு உங்களுக்குப் பிடிக்கும் என்பது எனக்குத் தெரியும்..........." என்று எழுதிவிட்டு, மருகி ஒருவர் ஒருதகரப் பெட்டிக்குள் பாணிப் பனாட்டுப் 'பார்ஸல்' செய்து அனுப்பியிருக்கின்றார்.

பருத்தித்துறைப்பகுதியைச் சேர்ந்த இம் மருகியின் அன்பை நான் மெச்சுகின்றேன். பாணிப் பனாட்டை இக்காலத்தில் எங்களிற் பலர் விரும்பிச் சாப்பிடுவதில்லை. எனது மருகி பனம்பண்டங்களில் மிகுந்த பிரியம் உள்ளவர் என்பதை அறிந்து பெருமிதமடைகின்றேன்.

மருமக்களே, பனை மிகவும் பிரயோசனமான மரம். அதனை நீங்கள் பாதுகாத்துவரவேண்டும். பனைமரத்தைப் பற்றி மருமக்கள் கட்டுரை எழுதி அனுப்புவார்கள் என்று நினைக்கின்றேன்.

# கிராமம் இனிது

**மே.403. ம. த. லோறன்ஸ்**

கிராமம் இயற்கை அன்னையின் இருப்பிடமாகும். அங்கே இயற்கைக் காட்சிகள் மலிந்து கிடக்கின்றன.

பல நிறங்களை உடைய வானவில்லானது தோன்றி மறைவதையும், குயிலினம் இனிய கீதங்கள் பாடுவதையும், சந்திரன் தன் பட்டு நிலவைக் கொட்டிக்கொண்டிருப்பதையும், விண்மீன்களின் சுடர்களினால் வாய்க்கால் வழியே ஓடிக்கொண்டிருக்கும் கழனி நீர் மின்னிக்கொண்டிருப்பதையும், இயற்கை அன்னையின் இருப்பிடமான கிராமத்தில்தான் நாம் நன்றாக அனுபவிக்க முடியும்!

குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் இன்பங் கொடுப்பதும் கிராமமே. சலசல என ஒலித்துக்கொண்டு ஓடும் வாய்க்கால் நீரின் அழகும், சுதந்திரமாகத் துள்ளிவிளையாடும் மாட்டுக்கன்றின் அழகும், தலை நிமிர்ந்து நிற்கும் பச்சைப் பசேலென்ற நெற்கதிர்களின் அழகும், கூட்டங் கூட்டமாய்ப் பறந்து செல்லும் பட்சி ஜாலங்களும், குழந்தைக்குப் பெரிதும் இன்பத்தைக் கொடுக்கின்றன. இயற்கை இன்பத்தைக் குழந்தை அப்படியே அள்ளிப் பருகுகின்றது.

காலைமுதல் மாலைவரை நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த வேலை செய்கின்றான் தொழிலாளி! பட்டு நிலாப் பொங்கி வழியும்போது வயலின் மத்தியில் நின்று, தான் பாடுபட்டதிற்குப் பரிசெனத் தோன்றும் நெற்பயிரைப் பார்க்கின்றான்......இனிய குளிர்ந்த காற்று 'குபு குபு' என்று வீசுகின்றது. விண்மீன்கள் அவனைப் பார்த்துச் சிரிக்கின்றன. நெற் கதிர்கள் அவனை நோக்கி வாழ்த்துகின்றன. உழவனின் உள்ளம் இன்பத்தில் மூழ்குகின்றது. தான் பகலெல்லாம் கஷ்டப்பட்டதை அவன் மறக்கின்றான். இயற்கை அன்னையின் உறவை வரவேற்கின்றான்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 7555**

நவாலி
**சுப்பிரமணியம் நவரத்தினம்**
வழக்காளி

கண்டி உடஸ்பத்து பீ. டபிள்யு. டி. ஓவசியர் **கதிரவேலு கந்தையா**
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7555-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1951-ம் ஆண்டு ஒக்டோபர் (ஐப்பசி) மாதம் 17ந் திகதி (17-10-51) புதன்கிழமை பிற்பகல் 3½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1216-00 ம், இதில் ரூபாய் 1000-க்கு 22-2-51 திகதி தொடக்கம் 18-5-51 திகதி வரைக்கும் 100-க்கு 7 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 202-92 சதம்.

**காணியின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகக் கோவிற்பற்று மல்லாகமிலுற "கட்டை சீமாவும் ராச்சி சீமாவும்" நிலைப்பரப்பு ஒன்பதும் (9) குளி 6ம் வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு, சரவணமுத்து கனகசபைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு, கணபதிபெண் தெய்விக்கும், முருகேசு பெண் கேட்ரி கதிரேசிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும். கணபதி யேம்ஸ் முருகேசுவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு, ஒழுங்கை. தெற்கு, இலங்கநாதர் குகதாசனுக்கும் மறுபேருக்கும் கந்தையா பெண் விசாலாட்சிப் பிள்ளைக்குமுரிய ஆதனங்கள். இதிற் சொரியலாய் அரைவாசியும் அதற்குரியவைகளும் (½) முற்பதிவு H. $\frac{143}{131}$.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 28-8-51 [1401]

## மாமா பதில்

**கீ. 559. சி. சச்சிதானந்தம்;** மருமகனே, நீர் பாட்டுப்பாடுவதிற் கெட்டிக்காரன். பதிவு இலக்கத்தை நித்திரை கொள்ளும் போதும் மறந்துவிடக் கூடாது. எனது திருத்தங்களையும் கவனிக்கவும்.

**கீ.378. க. சிவசுப்பிரமணியம்:** உமதுகடிதத்துக்குஎனது நன்றி. கட்டுரையை முத்துப்போன்ற எழுத்துக்களில் எழுதியிருக்கின்றீர்.

**மே. 267. ந. சிவபாதம்:** உமது விருந்தை அனுபவித்து மகிழ்ந்தேன்.

**மே.532 ந. சுந்தரம்பிள்ளை:** மருமகனே, உமது அன்னைமொழி உருக்கமாக எழுதப்பட்டிருக்கின்றது.

### பிறந்ததின வாழ்த்துக்கள்

☼

**16-9-51 — 22-9-51**

கீ.37. சி. கனகரத்தினம், மே.252. ஐ. பாலசுப்பிரமணியம், கீ.314. ம. விமலர், மே.319. வ. சிவபாதசுந்தரம், மே.422. சீ. அன்னம், கீ.427. ஆ. திலகவதி, மே.445. கோ. தங்கம்மா, மே.510. கே. எஸ். தர்மராஜா, மே. 532. ந. சுந்தரம்பிள்ளை.

☼

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக!

# கெட்டிக்காரன்!

**கீ.559. சி. சச்சிதானந்தம்**

குட்டிக் கரணம் போடுவதில்
குப்பன் மிகவுங் கெட்டிக்காரன்
கிட்டிப் புள்ளு ஆடுவதில்
கிருஷ்ணன் ஒரு கெட்டிக்காரன்
பச்சைக் குதிரை தாண்டுவதில்
பட்டாபி தான் கெட்டிக்காரன்
கோடு கீறி ஆடுவதில்
கோவலனே கெட்டிக்காரன்
பந்த டித்து ஓடுவதில்
பரம சிவனே கெட்டிக்காரன்
முந்திக் கோலி ஆட்டத்தில்
முருகன் நல்ல கெட்டிக்காரன்
பாண்டி ஆட்டம் ஆடுவதில்
பார்த்த சாரதி கெட்டிக்காரன்
தண்டும் கிளித்தட் டாடுவதில்
தங்க வேலு கெட்டிக்காரன்
பாய்ந்து நீளந் தாவுவதில்
பக்த வத்சலன் கெட்டிக்காரன்
நீந்த வேலன் கெட்டிக்காரன்
நீ எதிலே கெட்டிக்காரன்?

### ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..........................................
விலாசம்: ..........................................
..........................................
..........................................
பிறந்ததிகதி: ..........................................

..........................................
தந்தை தாயார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

# நெல்லும் புல்லும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓடிக்கொண்டிருந்தன. பிள்ளையாரின் உள்ளம் எப்போது குளிரும்? எப்போது அவரது மனம் நெகிழும்? எப்போது மழை பொழிவார்? என்ற அவா எல்லோருடைய முகத்திலும் படர்ந்திருந்தது.

நாளடைவிற் பிள்ளையார் இரங்கினர். மழை பொழிந்தார். இல்லை, பொழியச் செய்தார். வயல், வாவி எல்லாம் வழிந்தோடியது வெள்ளம்; பெருவெள்ளம்! ஆனாலும், வயிறு வரண்டு வதங்கியிருந்த பூமிதேவி, ஒரேமூச்சில் நீரைப்பருகிஉள்ளங்குளிர்ந்து, உடல் பூத்திருந்தாள்.

மறுநாள், விடியற்காலை கலப்பைகளும், எருதுகளும், விதை நெல்லும், வேலையாட்களுடன் கூடி, வயல்களை நோக்கின. யாரோ ஒருவன் வழியில் இருந்த பிள்ளையாரின், சன்னிதியில் ஒரு தேங்காயைச் சில்லமாக்கிவிட்டுச் சென்றான்.

ஒருவன், நெல்லை மிகவும் லக்ஷணமாக வயலில் வீசினான். நெல் விதைத்த வயல்களையெல்லாம் உழுதுகொண்டிருந்தனர், வேறுபலர். அவர்கள், மாடுகளுடன் மாடுகளாக, இரண்டு மாடுகளின்பின் ஒருவராக, மாடுகளையே பின்தொடர்ந்துகொண்டிருந்தனர்.

நாட்கள் சென்றன. நெற்பயிர்கள், நாட்டிய ஊசிகள் போன்று, நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தன. நாளும் அவை வளர்ந்து, அவ்வயல் வெளியைச் சர்வம் பச்சைமயமாக்கின. பசுமையான பச்சைக் கம்பளி விரித்தாற்போல, அவ்வெளி காட்சியளித்தது! அதைக் கண்ட [illegible] முளைக் கூட்டம் அவ்விடம் வந்து சேர்ந்தது. கீழே பார்த்தது. பயிர்கள் ஆனந்தத்தில் மிதந்துகொண்டிருந்தன. அவற்றைப் பார்த்த கமக்காரனின் உள்ளம் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தது. உள்ளங் குளிர்ந்த அம்முகிற் கூட்டம் தானுங் கலந்துகொள்ள விரும்பி, மளமளவென்று அங்கிருந்தே குதித்துக் கூத்தாடியது.

எங்கிருந்தோ எட்டிப்பார்த்த சூரியன், வெட்கத்தினாலோ, என்னவோ, வெளிறிய முகத்துடன், முகிற்கூட்டத்தின் பின்னே மறைந்துகொண்டான்.

வயல்களை வெள்ளம் நிரப்பியது. பயிர்கள், வெள்ளத்தின்மேல் எழுந்து எட்டிப் பார்த்தன. நெற்பயிர்கள் மட்டுமா?—வேறும் ஏதேதோவெல்லாம் முளைத்திருந்தன!

அந்தக் கமக்காரன் வந்து பார்த்தான். நெற்பயிரே வேண்டுமென்று, அதற்காகவென்று, தான் எவ்வளவோ கஷ்டப்பட்டு விதைத்து வளர்த்த பயிர்களோடே, புல்லும் முளைத்தது அவனுக்கு ஆத்திரமாகவிருந்தது. அவற்றை உடனேயே களைந்துவிட வேண்டும் என்று தீர்மானித்தான். அதற்கென்று காத்திருந்த எத்தனையோ கரங்கள், அந்த வேண்டாத பயிர்களை — அந்த அபாயமான புற்களை யெல்லாம் — அப்படியே வேருடன் களைந்து வெளியே சேர்த்துக்கொண்டிருந்தன.

அவ்வேளையிலே, தனது தகப்பனுக்கு — அந்தக் கமக்காரனுக்கு — உணவு கொண்டு வந்தான் அவனது மகன். தனது தகப்பனருகே ஓடினான். "அப்பு! முளைச்ச நெல்லையெல்லாம் ஏன் புடுங்கிறுங்கள், அப்பு? நீயும் பாத்துக்கொண்டா நிக்கிறாய்?" என்று தன் தகப்பனைக் கேட்டான்.

"இல்லை மேனே; அவங்கள் நெல்லைப் புடுங்கயில்லே! புல்லைத்தான் புடுங்கிறான்கள். இப்பவே புடுங்காமல்விட்டால், நெல்லே தலைப்படாது. புல்லு நெல்லைத் தலையெடுக்கவிடாது. காலா காலத்திலே, சிறுபயிரிலேயே புல்லைக் களைஞ்சால் தான் நெல்லு நெல்லாய்வரும்" என்றான். * * *

கண்விழித் தெழுந்தேன். ஆனால், '......... காலாகாலத்திலே, சிறு பயிரிலேயே, புல்லைக் களைந்தால்தான் நெல்லு நல்லாய் வரும்' என்ற வார்த்தைகள் என் காதுள் ஒலித்துக்கொண்டிருந்தன.

மறுபக்கம் திரும்பினேன். சாளரத்தினூடாக வந்து, உள்ளே நுழைந்த சூரிய ஒளி, தரையிலே தவழ்ந்த கடிதத்திற் பதிந்திருந்தது. அக்கடிதம், காற்றிற்கு விரிந்து கிடந்தது. "......... என் அன்பே! என்மீது எதுஞ் சந்தேகம் ஏற்பட்டிருப்பின் அவற்றை அப்பொழுதே ஏன் களைந்துவிடவில்லை? எமது காதற் பயிரை அது பாதிக்குமளவும் ஏன் காத்திருந்தீர்கள்? ........." என்ற வார்த்தைகளில் அந்த ஒளி விழுந்துகொண்டிருந்தது. அதேநேரத்தில், "காலாகாலத்திலே, சிறுபயிரிலேயே, புல்லைக் களைந்தால்தான், நெல்லு நல்லாய் வரும்" என்ற அவ்வார்த்தைகள் என் காதைத் துளைத்தன.

சாளரத்தினூடாக வந்து கடிதத்தில் விழுந்த சூரிய ஒளியைப் பார்த்தேன். கடிதத்திலிருந்து, நான் வாசித்த அதே வசனங்களிலிருந்து, வெளியேறும் ஒளிபோல இருந்தது, அது!

எனது அறையுள் நிரம்பி என் கண்களுக்கு — ஏன் எவரது கண்களுக்குமே — தோன்றாதிருந்த தூசியெல்லாம், அவ்வொளியில் அகப்பட்டதும் மிகவும் தெளிவாகத் தென்பட்டன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The EeLAKESARI

T'Phone No.

NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N. PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, Sept., 16, 1951 | No. 11

## வட இலங்கை நெசவாளர் சங்கம்

வட இலங்கை நெசவாளர் சங்கச் செயலாளர் திரு. மூ. பொன்னையா அவர்கள் சென்ற 2-9-51-ல் கைத்தொழில் மந்திரியாரை யாழ்ப்பாணத்தில் சந்தித்தார். அத்தருணம்குடிசைக் கைத்தொழில் அதிபர் திரு. அழகரத்தினம் அவர்களும், வடபகுதிக் கைத்தொழில் அதிபர் திரு. விஜயதெய்வேந்திரம் அவர்களும் சமூகமாக இருந்தனர். மந்திரியார் அவர்கள் நூல் உற்பத்தி, துணி உற்பத்திசெய்யும் யந்திரசாலை ஆரசினரால் 2 வருடங்களுக்குள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமெனக் கூறினர்.

சென்ற காலங்களில் நெசவு நிபுணர்கள் காரியாலயத்திற் போதிய அளவில் இல்லை என்றும், இப்பொழுதுதான் சில முன்னேற்ற ஏற்பாடுகள் நடக்கிறதாகவும் கூறினர்.

அகில இலங்கை நெசவுத் தொழிலாளர் பிரதிநிதிகளும், கைத்தொழிற் காரியாலய அதிகாரிகள் ஆகியோரும் சமமாக உள்ள ஒரு சபையை நிறுவவேண்டுமென 1949-ம் ஆண்டில் எழுதிய கடிதத்தின்படி அன்றும் மந்திரியாரை வட இலங்கை நெசவாளர் சங்கச் செயலாளர் கேட்டபோது மந்திரியார் அவர்கள் வேறு இடத்திலும் இந்த யோசனை கூறப்பட்டதெனத் தெரிவித்தார்.

வடமாகாணத்திலும் இப்படியான ஒரு சபையை நிறுவவேண்டுமென வ. இ. நெ. சங்கக் காரியதரிசி வடபகுதிக் கைத்தொழில் அதிபர் திரு. விஜயதெய்வேந்திரம் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

## அகில இலங்கைப் பகுத்தறிவுக் கழகம்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில உள்ள 7-ம் இலக்க இல்லத்தில் செப்டெம்பர் 9-ந் திகதி காலை எழுத்தாளர் சுப. இளங்கீரன் தலைமையில் ஒரு கூட்டம நடைபெற்றது. இலங்கையின் பல பாகங்களிலிருந்து ஆதரவாளர் பலர் வந்திருந்தனர். கழகத்தின் நோக்கங்கள் விவாதிக்கப்பட்டபின்னர் மார்க்ஸீய அடிப்படையில் "அகிலஇலங்கைப் பகுத்தறிவுக்கழகம்" தோற்றுவிக்கப்பட்டது. தலைவராக திரு. சுப. இளங்கீரனும், செயலாளராக திரு. எஸ். வேலுப்பிள்ளையும் பொருளாளராக திரு. ரீ. சுப்பிரமணியமும் தெரிவுசெய்யப்பட்டனர். எட்டுப் பேர்களைக் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

## இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்றம்

### விசேட பொதுக் கூட்டம்

இம் மன்றத்தின் பொதுக் கூட்டம் 16-9-51 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9-30-க்கு வெள்ளவத்தை சைவமங்கையர் கழகமண்டபத்தில் நடைபெறும்.

**நிகழ்ச்சிகள்**

1. பாடகர் தரம் வகுத்தல்.
2. பக்க வாத்தியங்களை இதுவரை கலைஞர்கள் தாமே ஒழுங்கு செய்து வருகிறார்கள். ஆனால் வருகிற ஒக்டோபர் 1-ம் திகதி தொடக்கம் ரேடியோ சிலோன் பகுதி அதிகாரிகள் தாமே ஒழுங்கு செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தப் புதிய முறை ஏற்றுக்கொள்ளத்தக்கதா வென்பதை முடிவு செய்தல்.
3. கலைவிழா.

## பூங்காவும் சிங்கமும்

[3-ம பக்கத் தொடர்ச்சி]

டைய நான்கு வயதுக் குமாரன் என்னுடன் பிரான்சுப் பாஷையில சம்பாஷித்தார்! நான் தமிழில் ஏதாவது கேட்ட போது பிள்ளை பிரான்சு மொழியில் பதில் கூறினர். நான்கு வருஷத்திலும் பெரும் பகுதியான காலத்தை பெல்சியத்தில் கழித்தமையால் ஊரின் பாஷையைப் பிள்ளை கற்றுக்கொண்டது. (தொடரும்)

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப் பிரதி சதம் 10. காசு 10

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. 6887

வண்ணார்பண்ணை கிழக்கு கீரிமலையடி நாகப்பர் கனகரத்தினம் வழக்காளி

வேலணை மேற்கு
1. முத்து கணபதி சின்னத்தம்பு
2. பெண் வள்ளியம்மை எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6887-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை, 1951-ம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி) மாதம் 15ந் திகதி (15-10-51) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 3395-95 ம், இதில் ரூபாய் 3000/க்கு 4-8-50 திகதி தொடக்கம 3-11-50 திகதி வரைக்கும் 100-க்கு 7 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 242-44 சதம். இதில் ரூபாய் 120/00 இறுபட்டது.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை "செல்வி நின்றமும் மேற்கு வெள்ளடையும்" செற்பரப்பு 18-ம் ஆனால் அளவுப்படி செற்பரப்பு 20-ம் எல்லை: கிழக்கு, ஒழுங்கை, வடக்கு, குளம். மேற்கு, குளமும் நாகலிங்கம் பரநிருபசிங்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும். தெற்கு, நாகலிங்கம் பரநிருபசிங்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு C. $\frac{157}{215}$

2. மேற்படி வேலணை மேற்கிறை "ஆலம்புலம் பிரிவும் ஆலம்புலம் மேற்கும்" நிலப்பரப்பு 9-ம் குளி $4\frac{1}{4}$ம் வீடும் | பனைகளும் கிணற்றில் பங்கும், எல்லை: கிழக்கு, மருதப்பு சதாசிவத்தின் ஆதனம். வடக்கு, சதாசிவம் பெண் சிவரத்தினத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, செல்லத்துரை ம்பெண் நாகம்மாவின் ஆதனம். தெற்கு, செல்லத்துரை பெண் நாகம்மாவுக்கும் முத்து கணபதி சின்னத்தம்புவுக்குமுரிய ஆதனங்கள். இதில் சொரியலாய் அரைவாசியும் அதற்குரியவைகளும் ($\frac{1}{2}$)
முற்பதிவு C. $\frac{218}{167}$.

3. மேற்படி வேலணை மேற்கிறை "அறவுறப்குத்தி" நிலப்பரப்பு 17-ம் குளி 12-ம் இதில் வடக்குப்பக்கமாக சிவஞானம்மாவுக்குச் சீதனம் கொடுத்தது நிலப்பரப்பு 8-ம் குளி 15-ம் நீக்கித் தெற்குப்பக்கமாக நிலைப்பரப்பு 8-ம் குளி 15-ம், எல்லை கிழக்கு, ஒழுங்கை, வடக்கு, சேனதிராசா பெண் சிவஞானம்மாவின் ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு, முருகர் மருதையனரின் ஆதனம், இதடங்கலும்.
முறபதிவு C. $\frac{244}{225}$.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer.

தெல்லிப்பழை 24-8-51 [4403]

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்திய கோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.


**கடன்:**
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
கிருப்பர்

[4382]

## மீனுவிற்கு உண்மையில் சுகவீனம் ஒன்றுமில்லை...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா—சபாரத்தினம் அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு செப்டம்பர் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.